# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 பிப்ரவரி 2002 இதழ் - 2



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

© 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை **ரூ.20/-.**

தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...


1. ஆசிரியர் உரை 1
2. **ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்** 6
3. பெண்கள் பகுதி 10
4. வாலிபர் பகுதி 14
5. ஏசாயா ஒரு கண்ணோட்டம் 18
5. சிறுவர் பகுதி 19
6. வெளிப்படுத்தின விசேஷம் 21
7. சபைக்கு திருமறைப் பெயர்கள் 27

# THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

Editor
**S. Rajanayagam**

Honorary Editor
**J.C. Choate**

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India**

*Pleading for the restoration of pure New Testament Christianity*

**Vol.16 - February - 2002 Issue-2**


*ஆசிரியர் உரை*

# கொத்தி எருப்போடுவோம் வாரீர்!

இன்றைய கிறிஸ்தவ மக்களிடையே காணப்படும் ஒருவித சோர்வையும் மெத்தனத்தையும் கண்டும், கனிகொடாத நிலையையும் கேட்டும் கவலைப்படாமல் இருக்கிற உண்மைக் கிறிஸ்தவர்கள் மிகச் சிலரே இருக்க முடியும். இந்த இழி நிலைக்கு யார் காரணம் என்று கேட்டால் ஒருவர் மற்றவரையும் மற்றவர் அடுத்தவரையும் சுட்டிக் காட்டி விட்டுத் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முற்படுவார்கள். எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் நிச்சயமாக ஒரு முடிவுக்கு வரமுடியும். பொதுவாகவே கிறிஸ்தவர்கள் தங்களுடைய அழைப்பின் மேன்மையை நன்கு உணர்ந்து கிறிஸ்துவின் உயர்ந்த வாழ்க்கை நெறிகள் அடங்கிய உபதேசச் சட்டங்களைக் கடைப்பிடிக்காமல் அலட்சியம் செய்து தங்கள் மனம்போன போக்கில் வாழ்ந்து வருகின்றனர் என்பதே அம்முடிவு.

அப்படியானால் அந்த தவறை எப்படிக் களைவது, எங்கிருந்து தொடங்குவது? என்பன போன்ற கேள்விகள் எழும்புகின்றன. இந்த வேதனைக்குரிய நிலை உருவானதற்கும் இன்று அது வளர்ந்து களைந்தெறிவதற்கு இயலுமா? என்று மலைத்து நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்கும் பல காரணங்களைச் சொல்லலாம் என்றாலும், தேவனுடைய ஊழியக்காரர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு தங்கள் வாழ்க்கையால் அதை மறுதலித்துக் கொண்டிருக்கிற மக்களுக்குக் கணிசமான பங்கு உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது. தன்னை ஒரு வரம் பெற்ற ஊழியக்காரர், தேவனோடும் கிறிஸ்துவோடும் நேரடியாக பேசுகின்ற அருள்பெற்றவர் என்று மக்கள் மதிக்க வேண்டும் எனற் சுயவிளம்பரத்துக்காக வீணர்கள் சிலரை தங்கள்

வசம் சேர்த்துக் கொண்டு சுவிசேஷத்தை கேலிக் கூத்தாக்கி, தெருவில் வேடிக்கை காட்டும் மோடி மஸ்தான்களைபோல பாமர மக்களையும் சபல புத்தி உள்ளவர்களையும் மயக்கி இதுதான் இயேசுபிரான் காட்டிய வழி, இது தான் இரட்சகரின் இலட்சியம் என்று பிதற்றித் திரிகின்றனர். அவர்கள் சீஷத்துவத்தின் விலையை, அதிலுள்ள அர்ப்பணிப்பு, தியாக உணர்வை அதன் தூய்மை நிலையை விளக்கிக் கூறமாட்டார்கள். கிறிஸ்துவை பின்பற்ற விரும்புகிறோம் என்று சொல்பவர்களின் கூற்று உண்மையாகவே இயேசுவின் அரிய கருத்துக்களைப் புரிந்து ஏற்றுக் கொண்டதால் ஏற்பட்ட முடிவுதானா என்பதைக் கவனிக்கமாட்டார்கள். அப்படி நாம் சொன்னால், ஐயோ, பாவம் அவன் இயேசுவை ஏற்றுக் கொள்ள விரும்புகிறான். நாம் அதற்கு மறுப்புச் சொல்லலாமா இருதயத்தின் நினைவுகளை நாம் அறியக் கூடுமா? அது தேவனுடைய காரியமல்லவா என்று பசப்புவர். ஏராளமான ஆத்துமாக்களை ஆதாயம் செய்ததாக வேதம் நற்சாட்சி பகருகின்றன. யோவான் ஸ்நானகனும் நமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் இந்த விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள் என்று கவனிப்போம்.

அரசனையே அதட்டிக் கேட்டு அவனுடைய கோபத்திற்கு ஆளான அஞ்சா நெஞ்சன் யோவான்ஸ்நானகன் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வந்த பரிசேயர்களையும், சதுசேயர்களையும் பார்த்து "**விரியன் பாம்புக்குட்டிகளே என்று கடுமொழியால் சாடி மனத்திருந்தலுக்கேற்ற கனிகொடுங்கள் என்று**" அறிவுரையும் கூறுகிறான். (மத் 3:1-8)

சாந்தத்தின் உறைவிடமாகிய நமது ஆண்டவராகிய இயேசு அந்த அளவு சுடுசொல்லால் தாக்கவில்லையேயொழிய இம்முக்கியமான பிரச்சனையில் தனது ஆலோசனையை கூறாமலில்லை. லூக்கா சுவிசேஷத்தில் இதை குறித்து ஒரு உவமையை சொல்லியிருக்கிறார் (லூக்கா 14 : 25 – 33).

ஒருவனுடைய பெற்றோர்கள், சகோதர சகோதரிகள் மனைவி குழந்தைகள் ஏன், ஒருவனுடைய உயிரே கூட கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒருவனுக்கு பெரிதாகத் தோன்றக் கூடாது என்றும் கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என்பது இன்பமான உல்லாசமான பொழுதுபோக்கு அல்ல என்றும், துன்பமும் தொல்லைகளும் நிறைந்த வாழ்க்கை நெறி என்றும் விளக்கியுள்ளார்.

அப்படி அவர் அறிவுரை கூறியதோடு நிறுத்திக் கொள்ளாமல் தான் உதவ நேர்ந்த எல்லா மனிதரிடத்திலும் தன்னைப் பற்றியும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றியும் அக்கறை காட்டுகிறாரா என்று கவனித்திருக்கிறார். எடுத்துக்காட்டாக லாசரு என்பவரை உயிரோடு எழுப்பிய நிகழ்ச்சியை எடுத்துக் கொள்வோம். நான்கு தினங்களுக்குப் பிறகு அவரை உயிரோடு எழுப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு கல்லறைக்குச்

செல்லுகிறார். ஆனால் தன்னுடன் வந்து சுற்றிலும் நிற்கிறவர்களைப் பார்த்து கல்லை எடுத்துப் போடுங்கள். (யோவா 11 : 39) என்று கட்டளையிடுகிறார். ஏன் மரித்தவனுக்கு உயிர்கொடுக்கும் வல்லமை பெற்ற நமது ஆண்டவருக்கு கேவலம் ஒரு கல்லைப் 'புரண்டு வழிவிடு' என்று கூறமுடியாதா? சிந்தித்துப் பாருங்கள்! கர்த்தர் தான் செய்யப்போகிற இந்த மகத்தான காரியத்தை அவர்கள் புரிந்து கொண்டு விசுவாசிக்கவும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுடைய பங்கும் ஓரளவுக்கு இருக்கிறது. வெறுமனே கைகளைத் தட்டி தாளம் போடுவதனாலேயே பரலோகம் போய் சேர்ந்துவிட முடியாது என்பதையும் உணர்த்தவே அவ்வாறு கூறினார் என்று கூறமுடியும்.

அப்படியே தயவு செய்து, யோவான் 9-ம் அதிகாரத்துக்கு வாருங்கள். அங்கே ஒரு பிறவிக் குருடனை சந்தியுங்கள் அவன் மெத்தப்படித்த பட்டதாரி அல்ல. சமுதாயத்திலே செல்வாக்குப் பெற்ற பெரிய மனிதனும் அல்ல. ஆயினும் அவனுடைய விசுவாச உறுதியும், கொள்கைப்பிடிப்பும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மாபெரும் விளக்கமாக அமைந்திருக்கிறதைப் பாருங்கள். முதலாவதாக அவனிடத்தில் காணப்படுகிற சகிப்புத் தன்மையை கவனியுங்கள். எச்சில் என்றாலே அருவருப்பு தோன்றுகிறது. அப்படிப்பட்ட எச்சிலை தரையிலே துப்பி, சேறுண்டாக்கி அதை ஏற்கனவே குருடாக இருக்கிற கண்ணில் பூசிய பின்னர் **"நீ சீலோவாம் குளத்திற்குப் போய்க் கழுவி பார்வையடை"** என்று கூறுகிறார். ஐயோ, பாவம்! அவனோ ஏற்கனவே குருடன். அவன் கண்களிலே சேற்றைப் பூசி குளத்திலே போய் கழுவு என்கிறாரே வழுக்கி விழுந்துவிட்டால் என்ன செய்வது? என்று நீங்களும் நானும் கூட அங்கலாய்க்கிறோம். ஆனால் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள கர்த்தர் அப்படிச் செய்யச் சொல்லும் போது காரணம் நமக்கு விளங்குவதில்லை யல்லவா? அதுவும் எத்தனையோ பேய் பிசாசுகளைத் துரத்தும் போதும் கூட வாய்ச் சொல்லைத் தானே பயன்படுத்தினார், என்று அறியும் போது நமது வியப்பு இன்னமும் பன்மடங்கு அதிகமாகிறது. ஆனால் அந்த பிறவிக் குருடன் எவ்வித முறுமுறுப்போ, சலிப்போ இல்லாமல் கீழ்ப்படிகிறான். பார்வையடைந்தவனாகத் திரும்பி வருகிறான்.

நாமும் கூட எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தபோதிலும் தேவனுக்குக் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ள வேண்டும். தேவன் தம்மை நேசிக்கிறவர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி தமக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று விரும்புகிறார். இரண்டாவதாக நாம் அவனிடத்திலே கவனிக்கக் கூடிய மற்றொரு நற்பண்பு, சுறு சுறுப்பு. வெகு குறுகிய நேரத்தில் அநேக மக்கள் அவன் பார்வையடைந்து மகிழ்ச்சியாக இருப்பதை அறிந்து அவனிடத்தில் விசாரிக்கிறார்கள். அவர்கள் யாவருக்கும் தான் பார்வையடைந்த விதத்தைக் குறித்து விளக்கமாகக் கூறினான். அவனுக்குப் பார்வை கொடுத்தவர் ஒரு பெரிய தீர்க்கதரிசி என்பதை பரிசேயர்கள் மற்றும் யூத மதத் தலைவர்கள்

முன்பிலும் அறிக்கை செய்கிறான். (மத் 10 : 32) ஓய்வு நாளைக் குறித்த சட்டமோ, இயேசுவைக் கிறிஸ்துவென்று எவனாவது அறிக்கை செய்தால் அவனைச் சபைக்கு புறம்பே தள்ளிவிடுவோம் என்ற பயமுறுத்தலோ அவனுடைய நம்பிக்கையை அசைக்க முடியவில்லை. அவனுடைய துடுக்குத்தனமான பேச்சினால் தன்னுடைய பெற்றோருக்கு ஏதேனும் துன்பம் விளையுமோ என்றும் கவலைப்படவில்லை (லூக் 14 : 26) என்னே, அவனுடைய துணிவும், கொள்கைப் பிடிப்பும்? இன்றைக்கு கிறிஸ்தவர்களாகிய நம்மெல்லோரும் அவனைப் போலவே துணிவும் மன உறுதியும், கொள்கைப் பிடிப்பும் உள்ளவர்களாக இருந்தால் கிறிஸ்தவத்தின் நிலை மிகவும் வித்தியாசமானதாகவன்றோ இருக்கும்!

அடுத்ததாக, தேவனுடைய எளிதான திட்டத்தைப் புரிந்து கொள்ள முடியாமலும், சில நேரங்களில் புரிந்து கொள்ள விருப்பம் அற்றவர்களாகவும், தங்களுடைய தலைக்கனத்தால் மனிதன் உருவாக்கிக் கொண்ட பல்வேறு விதமான தத்துவங்களைப் பற்றியெல்லாம் அவன் அலட்டிக் கொள்ளவில்லை. மெத்தப் படித்திருக்கிறோம் என்ற மமதையால் மண்டை வீக்கம் பெற்றிருந்த அந்த யூதத்தலைவர்கள் நியாயப் பிரமாணம் என்றும் பழைய ஏற்பாடு என்றும் எதை எதையோ சுட்டிக் காட்டி அவனைக் குழப்பி, மிரட்ட முயல்கின்றனர். நியாயப் பிரமாணத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும் என்றும், முழுவதும் பாவத்தில் பிறந்தவன் என்றும் பல இழி சொற்களை வீசி அவனை மடக்க முயலுகின்றனர். பெரிய மனிதர்களும், கல்விமான்களும் மதவித்தகர்களும் அவனைப் பற்றியும், அவனுடைய நம்பிக்கையைக் குறித்தும் என்ன நினைக்கிறார்கள் என்றெல்லாம் அவன் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை.

பல கோணங்களில் முயன்றும் அவனை மேற்கொள்ள முடியாத யூதத் தலைவர்கள் எரிச்சலடைந்து தங்கள் வசமுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி அவனைச் சபைக்குப் புறம்பாக்கி தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டனர். 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்' என்று அன்றே பவுலார் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். (II தீமோ 3 : 12) ஆம் சகோதரனே, இப்படி இரத்த சாட்சியாக மரித்தவர்களையும், கிறிஸ்துவினிமித்தம் பாடனுபவித்தவர்களையும் வேதாகமத்தில் பல இடங்களில் காணலாம். அப்படிப்பட்டவர்களுடைய கல்லறைகள் மீது தான் அநேக உயிரோட்டமுள்ள பலமான சபைகள் உதயமாயின என்பதை சபை வரலாறு கூறுகிறது.

அதிகார பீடத்தில் அமர்ந்து கொண்டு கோலோச்சும் உத்தமர்கள், அறியாமை, மூடநம்பிக்கை, விக்கிரக ஆராதனை கள்ள போதகங்கள் என்னும் இருளிலே அகப்பட்டுக் கொண்டு தவிக்கிற மக்களுக்கு உதவும் நல் எண்ணத்துடன் மெய்ஞான ஒளியாகிய இயேசுவினிடத்தில் நாம் வழி நடத்த எத்தனிக்கும் பொழுது, இரும்புக் கரம் நீட்டி நமக்குத் தடை விதித்து தீங்கு

விளைவித்தால் நாம் என்ன செய்யப்போகிறோம்? என்றோ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சம்பவித்த சில நிகழ்ச்சிகளையே சொல்லிச் சொல்லி பழங்கதை பேசப் போகிறோமா? அல்லது தேவனுடைய ஆசீர்வாதம் நிரம்பிய மெய் வாழ்வுக்கு முன்பு இந்த அழிந்து போகிற உலகமும் அதன் மேன்மைகளும் குப்பையும் தூசமாம் என்று அறைகூவி கிறிஸ்துவுக்காக எழும்பிப் போராடத் தோள் தட்டுகிற மற்றவர்களையும், வீராங்கனைகளையும் நம்முடைய சீரிய முன் உதாரணத்தின் மூலம் உருவாக்கப் போகிறோமா? என்பதே இன்றைக்கு நம் மத்தியில் விடுக்கப்பட்டிருக்கிற சவால். அன்பின் திருவுருவம், சாந்தத்தின் உறைவிடம், பரிசேயரைக் கடுமையாகச் சாடினாரே அதற்கு என்ன காரணம் தெரியுமா, என் உடன் ஊழியனே? அவர்கள் சந்தை வெளிகளில் வந்தனங்களை விரும்பியும், மனிதரால் **'ரபீ'** என்றழைக்கப்படுவதற்கு ஆசைப்பட்டும், மக்களிடம் காணப்படுகிற தேவ விரோதச் செயல்களையும் பாவங்களையும் கண்டும் காணாதவர்கள் போல் இருந்ததோடு மட்டும் அல்லாது அப்படிச் செய்கிறவர்களுக்கு முகத்தாட்சண்யம் காட்டி, தேவனால் வரும் மகிமையைக் காட்டிலும் மனிதரால் வரும் புகழ்ச்சியை விரும்பியதாலேயே. (யோவா 12 : 43) அதன் விளைவாக மாய்மாலமும், வெளிப்பகட்டு, மேல் பூச்சு விசுவாசமும் தேவனுடைய மெய்ஞான வழி செல்வோரைக் குழப்பமுறச் செய்தன. அதனால் தான் அவர்களைக் 'குருட்டு வழிகாட்டிகள்' என்று இடித்துரைக்கின்றனர். அருமைச் சகோதரன் யாக்கோபும் கூட என் சகோதரர்களே, நீங்கள் எல்லோரும் போதகர்களாக விரும்பாதீர்கள். போதகர்களாகிய நாம் கண்டிப்பான தீர்ப்புக்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்பது தெரியுமன்றோ? (திருத்திய மொழி பெயர்ப்பு) என்று எச்சரிக்கிறார். ஆகவே நாம் நம்மீது சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்பினை உணர்ந்தவர்களாக கிறிஸ்தவ வாழ்க்கை நெறிகள் அனைத்தையும் தெளிவாகவும், பூரணமாகவும் போதித்து, புரிந்து கொண்டு விருப்பம் தெரிவிக்கிறவர்களை மாத்திரம் அவர்களுடைய தொண்டர்களாக்குவோம். ஒருவேளை இது கடினமான வழி கர்த்தருடைய பணி இதனால் தாமதமாகும் என்று எண்ணி மலைக்க வேண்டாம். கர்த்தர் அப்படிப்பட்ட வழியைத் தான் நிச்சயம் அங்கீகரிப்பார். இடுக்கமான வழியில் செல்பவர் சிலர் தான் என்பதை அன்றே சொன்னதை நினைவுகூர். பன்றி யானையை விட குறைவான காலத்தில் நிறைய குட்டிகளை ஈன முடியும். ஆனால் பன்றிக் குட்டிகளுக்கும் யானைக் குட்டிக்கும் பயனிலும் மதிப்பிலும் மாபெரும் வேறுபாடு இருக்கிறது என்பதை மறவாதே.

**E.Z. செல்வநாயகம்.**

**நினைவாக**

திருமறை ஆசான் இதழின் நிறுவன ஆசிரியர் E.Z. செல்வநாயகம் அவர்கள் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து 9-2-2002 உடன் 9 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

- ஆசிரியர்

# ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?

"எல்லாரும் பாவம் செய்தவர்கள் (ரோமர் 3 : 23), நீதிமான் ஒருவனும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. (ரோமர் 3:10). **"பாவத்தின் சம்பளம் மரணம்"** (ரோமர் 6:23). இப்படி மேலும் பல வசனங்களை தொடர்ந்து நாம் காணலாம். இவைகள் அனைத்துமே மனிதனை இழந்து போனவனாகவும், தேவனற்றவனாகவும், நம்பிக்கையற்றவனாகவும் காட்டுகிறது. அப்படியானால், மனிதன் எப்படி இரட்சிக்கப்படக்கூடும்? அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திற்கு திரும்புவோமானால், நாம் அதை கண்டுபிடிக்க இயலும்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பதினொரு மனமாற்று நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இடமிருக்குமானால், இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் ஒவ்வொருவரும் என்ன செய்தார்கள் என்பதைக் காண முற்படலாம். ஆகிலும் இப்பாடத்தில் மூன்று நிகழ்ச்சிகளை மாத்திரம் காண்போமாக. ஒவ்வொன்றிலும், ஒரே மாதிரியான கேள்வி கேட்கப்பட்டதும், ஒரு விதமான பதில்கள் கொடுக்கப்பட்டதையும் காண்கிறோம். இவைகளின் அடிப்படைக் கேள்வி, **"நான் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்?"** என்பதே. அவைகளில் ஒவ்வொன்றாகப் பார்த்து, கொடுக்கப்பட்ட பதில்கள் என்ன என்பதைக் காண்போம்.

1. பெந்தகோஸ்தே நாளில் "நாங்கள் என்ன செய்ய வேண்டும்"? என்று ஜனங்கள் கேட்டார்கள், (அப்போஸ்தலர் 2).

இங்கு பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் ஒரு அவிசுவாசிகளின் கூட்டத்திடம் பேசிக் கொண்டுள்ளனர். அவர்களின் அநேகரும் கிறிஸ்துவை சிலுவையிலறையப்படுதலில் பங்கு பெற்றிருந்தனர். ஆதலால் அவர்களை, கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டுவது அவசியமாக இருந்தது. இதைச் செய்வதற்கு, கிறிஸ்து அற்புதங்களையும், அடையாளங்களையும் அவர்களுக்கு முன்பாக நடப்பித்ததை நினைப்பூட்டுவது அவசியமாயிருந்தது. பிறகு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டாலும், அவர் அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, அநேகருக்கு தரிசனமாகி, பிறகு பரலோகத்தில் இருக்கிற பிதாவினிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். இறுதியாக, தம்மைக் குறித்து கூறப்பட்ட அநேக தீர்க்கதரிசனங்களையும், கிறிஸ்து நிறைவேற்றினதையும்,

அவரது வருகையைக் குறித்து தாவீது சொன்னவைகளையும், இப்பொழுது அவர் கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற உண்மையையும் எடுத்துக் கூறினார். "இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நாம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத் தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; "(அப்போஸ்தலர் 2:37-39). வேத வசனம் தொடர்ந்து, "**அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்**" என்று கூறப்பட்டுள்ளது. (அப்போஸ்தலர் 2:42). பிறகு அப்போஸ்தலர் 2:47-ல், இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்." என்று கூறுகிறார்.

சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது, ஜனங்கள் விசுவாசித்தார்கள், மனந்திரும்பினார்கள், பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்பதை தயவு செய்து கவனிக்கவும். எனவே என்ன நடந்தது? அவர்கள் இரட்சிக்கப்பட்டு, கர்த்தருடைய சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

2. சவுல் கேட்ட கேள்வி, "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்பதாகும் (அப்போஸ்தலர் 9; அப்போஸ்தலர் 22).

இதோ இந்த மனிதன் தனது முழு சுய பெலத்தால் கர்த்தருடைய சபையை நாசமாக்கி, இப்படியாக கிறிஸ்துவையும் உபத்திரவப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் தமஸ்குவுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது, தமஸ்குவுக்கு சமீபித்த போது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது : சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய். என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன் : ஆண்டவரே, நீர் யார்? என்றான். அதற்கு கர்த்தர் : நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித்

திகைத்து : ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் : நீ எழுந்து, பட்டனத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்." (அப்போஸ்தலர் 9:3-6). தொடர்ந்து சொல்லும்போது, அவன் பட்டணத்திற்குப் போய், மூன்று நாள் இரவும் பகலுமாக, பார்வையற்றவனாய், உபவாசித்து, ஜெபம் செய்து கொண்டிருந்தான். சவுலினிடத்தில் போய் அவன் என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்லும்படி அனணியா பணிக்கப்பட்டான் என்பதை எழுதப்பட்ட (வசனம்) பதிவேடு கூறுகிறது. பின்னதாக நடந்த சம்பவத்தை குறிப்பிடும்போது அனணியா தன்னிடத்தில் வந்து, **"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றார்"** என்பதை பவுல் குறிப்பிடுகிறார். (அப்போஸ்தலர் 22:16).

பவுல் எப்பொழுது இரட்சிக்கப்பட்டான்? கர்த்தர் அவனுக்கு தரிசனமானபோதே அவன் இரட்சிக்கப்பட்டான் என்று சிலர் கூறுவர், ஆனால் கர்த்தர் அவனிடத்தில் பட்டணத்திற்குப் போனால், அங்கே அவன் என்ன செய்ய வேண்டியிருக்கும் என்பதைக் கூறினார். சிலர், அவன் ஜெபத்தின் மூலம் (மட்டும்) இரட்சிக்கப்பட்டான் என்பர். ஆனால் அது உண்மையாயின், எழுந்து அவனுடைய பாவங்கள் போகக் கழுவப்படும்படி அனணியா ஏன் அவனுக்குச் சொன்னான்? உண்மையென்னவென்றால், பெந்தகோஸ்தே நாளில் ஜனங்கள் இரட்சிக்கப்பட்ட பிரகாரமாகவே, அவனும் (சவுலும்) இரட்சிக்கப்பட்டான். அவன் **சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டான்,** அதை **விசுவாசித்தான்,** தனது பாவங்களிலிருந்து **மனந்திரும்பினான்,** கர்த்தரை தேவனுடைய குமாரன் என்று **அறிக்கை செய்தான்,** தனது **பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பண்ணப்பட்டான்.**

3. பிலிப்பிய சிறைக்காவலன், **"நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்"** என சத்தமிட்டுக் கேட்டான். (அப்போஸ்தலர் 16).

பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு, சிறைச்சாலையிலே காவல் பண்ணப்பட்டிருந்தார்கள். அற்புதவிதமாக அவர்கள் (சங்கிலிகளிடமிருந்து) விடுவிக்கப்பட்டிருந்தபோது, சிறைக்காவலன் பயந்து, காவல் பண்ணப்பட்டவர்கள் தப்பிப் போயிருக்கக்கூடும் எனக் கருதி, அவசரமாக ஓடி, தனது பட்டயத்தை உருவி, தற்கொலை செய்து கொள்ள முற்பட்டான். ஆனால் பவுல் அப்பொழுது சத்தமிட்டு, **"உனக்குக் கெடுதி ஒன்றுஞ்செய்து கொள்ளாதே, நாங்கள் எல்லாரும் இங்கே தான் இருக்கிறோம் என்றான்.**

**அப்பொழுது அவன் தீபங்களை கொண்டுவரச் சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும், சீலாவுக்கும் முன்பாக விழுந்தான்**" (அப்போஸ்தலர் 16:28,29). அவன்தான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டான். "**அதற்கு அவர்கள் : கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி**" (அப்போஸ்தலர் 16:31). இங்கே சிலர் இவ்வசனத்துடன் நிறுத்தி, இந்த மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு செய்ய வேண்டியிருந்தது எல்லாம் இவ்வளவுதான், என்பர். ஆனால் இது ஒரு ஆரம்பம் மட்டுமே. இந்த மனிதன் யார்? அவன் ஒரு அவிசுவாசியாயிருந்தான். எனவே அவன் விசுவாசிப்பது அவனுக்கு அவசியமானதாயிருந்தது. இதை செயல்படுத்த எழுதப்பட்ட வசனம் தொடர்ந்து கூறும்போது, "**அவனுக்கும் அவன் வீட்டிலுள்ள யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்தில்தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும், அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போய், அவர்களுக்கு போஜனம் கொடுத்து தன் வீட்டார் அனைவரோடுங்கூட விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.**" (அப்போஸ்தலர் 16:32-34). இப்பொழுது இந்த மனிதனும் அவனுடைய வீட்டாரனைவரும் செய்தது என்ன? "**விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்**" (மாற்கு 16:16). "**கர்த்தருடைய வசனத்தை கேட்டதின்**" விளைவாக இந்த மனிதன், காவல் வைக்கப்பட்டவர்களின் காயங்களைக் கழுவியதின் மூலம் தனது மனந்திரும்புதலை வெளிப்படுத்தி, அந்த நேரமே ஞானஸ்நானம் பெற்றான். பவுல் பிரசங்கித்த செய்தியில் இவைகளும் அடங்கும். அப்படி இல்லாதிருந்தால், சிறைக்காவலன் அவர்களுக்கு செவி மடுத்திருக்க முடியாது.

ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? மேற்குறித்தவர்கள் செய்த அதே மாதிரிதான். ஒருவன் சத்தியத்தைக் கேட்க வேண்டும், தனது பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். கிறிஸ்துவை அறிக்கை செய்ய வேண்டும், ஞானஸ்நானத்திலே கீழ்படிய வேண்டும். தயவு செய்து வாசியுங்கள், எபிரேயர். 11:6; ரோமர். 10:10; லூக்கா 13:3; அப்போஸ்தலர் 17:30; மத்தேயு 10:32; மாற்கு 16:15,16; அப்போஸ்தலர் 2:38.

**J.C. CHOATE** **J.C. சோட்**

# நம்முடைய பிள்ளைகளுக்கு முன்னுரிமைகளை கற்றுத் தருதல்

அற்புத படைப்பான தொலைக்காட்சியின் மூலம், நாம் நம் வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்ளும் அறையிலிருந்தபடியே, பூமியின் பெருந்தொலைவு முனைக்கு பயணம் செய்யும் வாய்ப்பை, இப்போது பெற்றுள்ளோம்.

நான் அப்பேற்பட்ட ஒரு பயணத்தை சமீபத்தில் மேற்கொண்டேன். பாதுகாப்பற்ற அந்த பயணத்தை, நீதிக் கதைகளுக்குச் சொந்த பூமியாகிய "லடாக்" என்ற இடத்துக்கு மேற்கொண்டேன். அங்கே பல நூற்றாண்டுகளாகியும், இன்னும் மாறாத பழக்கங்கள் வழக்கத்திலிருப்பதை கண்டேன்.

அந்த மழைவாழ் மக்கள், தாங்கொண்ணா துன்பத்தையும், எதையோ இழந்த நிலையோடு இந்த இருபதாம் நூற்றாண்டில் மாறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளியே இருந்து பார்ப்பதற்கு எவ்வளவு விசித்திரமான இடம்! என்ன ஆச்சரியமான இடம்! என்று எந்தவொரு பார்வையாளரும் நினைப்பார்கள். இந்த இடத்தை வந்து பார்வையிடுவதென்பது, கடிகாரத்தை தலை கீழாக ஓடச் செய்வது போன்றது. கட்டாயமாக வெளியே உள்ள மக்கள் இங்கு வந்து, இந்த அமைதியான கலாச்சாரம் கொண்ட மக்களை, மற்ற இருபதாம் நூற்றாண்டின் நாகரீகம் கொண்ட வாழ்க்கையைப் போல மாற்ற மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஆனால், இங்கே மனிதர்கள் எந்தவொரு வசதியும், மருத்துவரும், மருந்துகளும், தங்களுடைய அன்றாட கடினமான வேலையை சுலபமாக்கித்தர எந்தவொரு இயந்திரமும் இன்றி வாழ்ந்தும், செத்தும் கொண்டிருக்கிறார்கள். இதிலும் கொடுமை என்னவென்றால், தேவனுடைய சுவிசேஷம் இங்கு சென்றடையாதிருத்தல் இன்னும் துக்கமான விஷயமாகும்.

பெரும்பாலும், லடாக்கில் வசிக்கும் மக்கள் புத்தமதத்தை சார்ந்தவர்களாகவே உள்ளனர். அன்றாட வாழ்க்கையில் பெரும்பாலான நேரம் புத்த மத சடங்குகள் சம்பந்தமாகவே சுழன்று கொண்டுள்ளது.

பொதுவாக வழக்கத்தில் இல்லாத ஒரு பழக்கம் இங்கே காணப்படுகிறது:

குடும்பத்தில் உள்ள தலைச்சன் மகன், அல்லது பிரியமான மகன் அவனுடைய சிறு வயதிலிருந்தே, பல சமயங்களில் பிறந்ததில் இருந்து கூட, புத்த மதத்துறவி ஆவதற்காக பிரித்தெடுக்கப்பட்டு விடுகின்றனர். இந்த குழந்தைகள் தாய்களுக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தேர்ந்தெடுக்கும் உரிமையோடு வளர்க்கப்படுகின்றனர். சிறுபையன்களாக இருக்கும் போதே அவர்கள் துறவி மடத்திற்குச் சென்று அங்குள்ள துறவிகளுடன் சேர்ந்து பயிலுகின்றனர்.

எப்படி இந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையை கட்டுப்படுத்துகிறார்கள், அவர்களும் தங்கள் பெற்றோரின் தீர்மானத்திற்கு செவிசாய்க்கிறார்கள்? என்பது நமக்கு கேள்வியாக இருக்கிறது.

லடாக்கில் எப்படியாவது ஒரு துறவியாக வரவேண்டும் என்ற ஒரு மனகிளர்ச்சியும், மனதார உய்த்து உணர்ந்து செயல்பட்டதே இதற்கு காரணம் என்பது தான் இதற்கான சரியான பதில் ஆகும். இந்த பதவி இரண்டு விசேஷ நபர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. முதற் பிறந்த மகன், அதிலும் விசேஷமாக மிகவும் நேசிக்கப்பட்ட மகன்! ஒரு குழந்தையானது, சிறுவயதிலிருந்தே தனக்கென்று சிறந்த ஒரு பொறுப்பு உண்டு என்பதை அறிந்து, தன். வாழ்க்கையை அர்ப்பணித்தும், பணியையும் உணர்ந்து வளருமாறு கற்பிக்கப்படும்பொழுது, தான் இவ்வாறு ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக வளர்க்கப்படுவதை உணர்ந்து அதைப்பற்றிய பெருமையும் படுகிறது. தன்னுடைய பெற்றோர்கள் தன்னை மற்ற குழந்தைகளைவிட சற்று அதிக அளவில் மதிக்கிறார்கள் என்ற முழு நம்பிக்கையும் அதன் இருதயத்தில் ஏற்படுகிறது. அவன் கடவுளுக்காக தன் குடும்பத்தின் சார்பில் சேவை செய்வதால், அவன் **"விசேஷித்தவன்"** என்ற பெயரைப் பெறுகிறான்.

இந்த விதமான கலாச்சாரமானது, லடாக்கில் எத்தனை குடும்பங்கள் உள்ளதோ அத்தனை புத்த துறவிகள் உள்ளனர் என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

அதற்கு நேர்மாறாக, இன்றைக்கு உலகிற்கு ஆசீர்வாதமாக இருக்கும் வகையில் ஊழியர்கள் என்ற முறையில் மிகக் குறைந்த சதவிகிதத்தினரே உள்ளனர். கிறிஸ்தவக் குடும்பங்கள் உள்ளனர். இதைப் பார்க்கும் போது, மிக அருமையான ஒரு கேள்வி எழும்புகிறது. ஏன்? கிறிஸ்தவக் குடும்பங்களில் ஆவிக்குரிய சேவை செய்யவும், போதிக்கவும், கிறிஸ்துவின் உண்மையான ஊழியனாக இருந்து செயல்படவும் ஏன் மிகக் குறைந்த இளைஞர்களே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர்?

இதற்கு பதில் என்னவென்று பார்த்தால், இந்த மாதிரியான அர்ப்பணிப்பு பற்றி பெற்றோர்களும், சபையும் செயல்படும் விதமே காரணமாகும்.

நம்பிள்ளைகள் சிறு வயதாயிருக்கும்போதே "**வெற்றியுள்ளவனாக**" வரவேண்டும் என எதிர்பார்த்து, அவர்களுக்கு அதை போதித்திருக்கிறோமா? வெற்றியுள்ளவன் என்கிறபொழுது, "**அதிகமாக சம்பாதித்தால், நீ மிகவும் பாக்கியசாலி**" என்று சொல்லியிருக்கிறோமா? அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி பேசும்போது நீ ஒரு மருத்துவராக, வக்கீலாக, வங்கிக் கணக்கராக, ஆசிரியராக வரவேண்டும் என்று கூறிவிட்டு, ஒரு போதகராக வரவேண்டும் என்பதைச் சொல்லாமலே விட்டு விடுவதுடன், அதைப் பற்றி குறைத்து மதிப்பிட்டும் பேசியுள்ளோமா? முழுநேர ஊழியர்களை ஏதோ அவர்கள் மூன்றாந்தர கிறிஸ்தவர்கள் என்றும், கூலிக்காக வேலை செய்கிறவர்கள் என்றும் மதிப்பே இல்லாத ஒரு வேலை செய்கிறார்கள் என்றும் கூறியுள்ளோமா?

ஒருவேளை நம்முடைய பிள்ளையோ, பையனோ ஒரு ஊழியனை திருமணம் செய்கிறார்கலென்றாள், அதை நாம் தடை செய்கிறோமா? அவர்கள் பெரியவர்களாகி, வெளி நாடுகளுக்குச் சென்று, மிஷனரிப் பணி செய்ய கனவு கண்டு கொண்டிருப்பார்களானால், நாம் அதற்கு எதிராக செயல்படுகிறோமா?

முதலாவதாக, அவர்கள் உலகக் கல்விகளிலே சிறந்து விளங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்? ஒருவேளை, அவர்கள் கணிதம், வியாபாரம், இசை, கலை, விளையாட்டு போன்ற காரியங்களில் சிறு வயதிலிருந்தே அவன் திறமை கொண்டவனாயிருந்தால், அதையே தொடர்ந்து செய் என்று கூறுகிறோமா? ஊழியம் செய்வதில் எந்தவொரு பாதுகாப்பும் இல்லை என்று அவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறோமா?

இன்றைக்கு நம்மில் வெகு சில பிள்ளைகளே ஊழியர்களாக வருவதற்கு காரணம், நாம் இதன் சிறப்பினை அவர்களுக்கு எடுத்துக்காட்டாததேயாகும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய வீட்டில் ஒரு ஊழியக்காரனாக ஒருவன் வேலை செய்ய வேண்டும் என்று நம்புவதைக் காட்டிலும், லடாக்கில் வசிக்கும் மக்கள் புத்த மதத்திலேயும், புத்த சிஷ்யனாக வேலை செய்வதிலும் கௌரவமும், அதிக நம்பிக்கையும் கொண்டுள்ளனரா?

நம்முடைய எண்ணத்திலே பின் என்னதான் தவறு செய்து கொண்டுள்ளோம்? நம்முடைய வலியுறுத்தலில் என்ன தவறு இருக்கிறது? நம்முடைய முன்னுரிமைகளில் என்ன தவறு செய்து கொண்டிருக்கிறோம்?

பழைய ஏற்பாட்டு கட்டளையில் கூட தேவன் சொல்லும்போது, "இஸ்ரவேல் புத்திரருக்குள் மனதிலும்; மிருக ஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது என்றார். (யாத். 13:2).

அதைவிட சிறந்த உடன்படிக்கையான புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்து வரும் நம்மிடம் அவர் குறைந்ததையா எதிர்பார்ப்பார்?

இந்தக் கட்டுரை வாசிக்கும் என் அன்பிற்குரிய தாய்மார்களே! உங்கள் பிள்ளைகளுக்கு முன்னுரிமையை கற்றுக் கொடுத்தலில் நம்முடைய பங்கு எவ்வாறு உள்ளது? இந்தக் கட்டுரை நம்முடைய மனதிற்கு ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தும் என்றே நம்புகிறேன். நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிரதான கட்டளையாகிய **"உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்"** என்றதில் நாம் எந்த அளவு நம்மை ஈடுபடுத்தியுள்ளோம். இன்றைக்கு நாகரீக உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் பெற்றோர்கள், தங்கள் மகள் கம்ப்யூட்டர், விஞ்ஞானம் இவைகளில் சிறந்து வெளிநாடு சென்று அதிக பணம் சம்பாதித்து பேரோடும், புகழோடும் வாழவேண்டுமென்று அதற்கு தங்கள் நேரம், பணம், உழைப்பு எல்லாவற்றையும் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த **"லடாக்கில்"** உள்ள நிலையை பார்க்கும்போது உண்மையாகவே அது நமக்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறது. வீட்டுக்கு ஒரு புத்த துறவி! துறவி !! என்ன ஆச்சரியம்! நம்முடைய குடும்பத்தில் உள்ள ஆண்மக்களை ஊழியனாக வருவதற்கு நாம் சிந்தித்திருக்கிறோமா? அதற்காக முயற்சி எடுத்திருக்கிறோமா? ஜெபிக்கிறோமா? நாமும் அதற்காக முன் வருவதில்லை. அப்படியே முன் வந்து தங்களை ஒப்புக் கொடுத்து ஊழியம் செய்பவர்களையும் சும்மா விடுவதில்லை.

அருமையானவர்களே! இந்த உலகின் காரியங்கள் அனைத்தும் இந்த உலகோடு முடிந்து போகக் கூடியவைகள். நம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய முறையில் தேர்ச்சி பெற அவர்களுக்கு வசனம், ஜெபம், இவைகளை கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தான் ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுத்த உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறும்போது, **"நீயும் நல்ல போர்ச்சேவகனாய் தீங்கனுபவி"** என்கிறார். நாமும் நம்முடைய பிள்ளைகள் தேவனுக்காக பாடுபடுவதற்கு, பழக்கப்படுத்த வேண்டும்.

பிள்ளைகள் கர்த்தருடைய பனி செய்ய முழுமனதோடு அர்ப்பனிக்க வேண்டும். இதை வாசிக்கும் தாய்மார்களே சிந்திப்பீர்களா? சிந்தித்து செயல்பட தேவன் உதவி செய்வராக! ஆமென்!

**பெட்டி சோட்** **ரேச்சல் ராஜநாயகம்**

# திருமணத்தில் தெய்வத்திருக்குமாரன்

**"மேசியா வருகிறார்"** என்ற நற்செய்தியை தன் பக்கங்களில் ஏந்தி நின்ற முன்னுரை நூலாகிய பழைய ஏற்பாட்டின் இறுதி புத்தகத்தை எழுதிக் கொடுத்த மல்கியா தீர்க்கன் மருளாமல் முழங்கிய பின் சற்றொப்ப 400 ஆண்டுகள் தேவ சத்தம் தன்னை அமைதியாக்கி கொண்ட சமயத்தில், புண்ணிய பூமியாகிய யூதேயா நாடு அந்நிய ஆட்சியின் கீழ் அலங்கோலப்பட்டிருந்தது. அந்நாட்டில் எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேம் என்னும் சிற்றூரிருந்தது. அவ்வூரில் எளிமையானதொரு வீட்டிலிருந்த மங்கையை சுற்றி வான் ஒளி மிளிர்ந்தது. இறைவனின் இவ்வெளிப்பாட்டால் அஞ்சி, வதங்கிய வதனத்துடனிருந்த வஞ்சியிடம், தேவதூதன் அஞ்சாதே தூய ஆவியானவரின் துணையுடன் உனக்கொரு குமாரன் பிறப்பார், அவருக்கு **"இயேசு"** என்று பெயரிடுவாயாக என்று மொழிந்ததைக் கேட்டவுடன் **"ஆண்டவரின் சொல்படியே ஆகட்டும்"** என அடிபணிந்து நின்றாள் அம்மங்கையான மரியாள். பத்து திங்கள் கழித்து விண்ணுலக வித்தாம் நமது அற்புத நாதர் உதித்தார், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து ஞானத்திலும், தேகத்திலும், மனுஷர் தயவிலும், கடவுள் கிருபையிலும் வளர்ந்தார். தனது முப்பதாவது வயதில் இறைப்பணியைத் துவங்கினார். அப்பணியை துவக்கி அவர் செய்த முதலாம் அற்புதத்தை அகக்கண்களால் அருகில் நின்று கவனிப்போம், வாருங்கள் வாலிபர்களே!

மாசு மாருவற்ற மன்னவரின் மார்பில் தலைசாய்க்கும் பாக்கியம் பெற்ற யோவான் அப்போஸ்தலன் தனது இரண்டாவது அதிகாரத்தில் இவ்வற்புதத்தை வடித்துக் கொடுக்கிறார். அவர் எழுதின நூலின் இறுதி அதிகாரங்களில், இவ்வற்புதத்தை தான் விளம்பின காரணத்தையும் நம்முடன் பகிர்ந்து கொள்ளுகிறார், பாங்காக படித்துப் பாருங்கள். "இந்த புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். **இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே, நித்திய ஜீவனை அடையும்படியாகவும்**, இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:30,31) என்றார். வாலிபர்களாகிய நீங்களும் அந்த அற்புதங்களை அகக்கண்களால் கண்டு, விசுவாசித்து நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்ற நோக்குடன், இம்முயற்சி செய்கிறேன், படித்து பக்குவமாய் இதயப் பலகையில் பதித்திடுக!

## மெய்யான திராட்சச்செடி தந்த தித்திக்கும் திராட்சை ரசம்

விவாகம் நடைபெறும் வீடிருந்த வீதிகளெல்லாம் நறுமணம் கமழும் பூத்தோரணங்கள் தொங்கவிடப்பட்டிருந்ததோ! திருமணம் நடக்கும் மனையின் முற்றத்தில் அலங்காரப் பந்தலும், பந்தலைச் சுற்றி குருத்தோலைகளும் எண்ணத்தின் தோற்றப்படி வண்ண வண்ணமாக தென்றலுக்கு ஏற்றபடி அசைந்து கொண்டிருந்ததோ! தன் வாழ்வின் குறைவுகளெல்லாம் நிறைவு செய்ய மாதொருத்தி வருகிறாள் என்ற மட்டற்ற மகிழ்ச்சியில் மணமகனும் இருந்தாரோ! அணிகலன்கள் பூண்டு அகம் நிறைந்து! கண் கலங்காமல் தன்னை காப்பாற்ற கணவன் வருகிறார்! என்ற எண்ணத்தால் நிறைந்து மணமகளும் இருந்தாளோ! என்பதைப் பற்றி எல்லாம் விவிலியம் விளக்கமாக விளம்பவில்லை. அது சொல்லுவதெல்லாம் **"மூன்றாம் நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது...."** என்பது தான். (யோ. 2:1)

இந்த மூன்று நாளின், முதல் நாளிலே யோவான் ஸ்நானின் கூற்றைக் கேட்ட, அந்திரேயாவும், யோவானையும் இயேசு கண்டார். (யோவா : 1;35), இரண்டாம் நாளில், இயேசு பிலிப்பைக் கண்டார் (யோவான். 1;43) மூன்றாம் நாளில் இவ்வற்புதம் நடந்ததாக நாம் எடுத்துக் கொள்ளலாம் என்று சில வேத அறிஞர்களும், சிலரோ அவர் யூதேயாவிலிருந்து புறப்பட்ட (யோவான். 1;43) நாளிலிருந்து மூன்றாவது நாள் தான், இந்த மூன்றாவது நாள் என்றும் சொல்லுகிறார்கள். எது எப்படியோ! நமக்கு திட்டமாக தெரியாவிட்டாலும் நமது ஆண்டவர் கலியாண நாளிலே கானாவூலிருந்தார் என்பது திட்டமாகவும் திடமாகவும் வாலிபர்களாகிய நமக்குத் தெரிகிறது.

வாலிபர்களாகிய நாம் இப்பொழுது கலியாண வீட்டில் குதூகலத்துடன் குழுமியிருக்கும் ஒவ்வொருவரின் மீதும் நமது கவனத்தை செலுத்தி அவர்களிடமிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ள எத்தனிப்போம் வாருங்கள்! முதலாவது நம் பார்வையை மகிழ்ச்சி வெள்ளத்தில் அலைமோதும் மணமக்கள் மீது மோத விடுவோம்!; வாழ்வின் பொன்னான நாள்! திருமணம் என்னும் இத்திருநாள்! அதுவும் ஆதித் திருமணத்தை ஆதாமுக்கும், ஏவாளுக்கும் ஏற்படுத்தியதில் ஒருவரான வார்த்தையானவர் மனுவுருவில் கலந்து கொண்டு சிறப்பித்த சிங்காரமான நாள்! மகிழ்ச்சிக்கு குறைவேது மணமக்களுக்கு? அவர்கள் என்ன கேட்டாலும், சில சமயம் கேட்காவிட்டாலும் தங்களை சுற்றியிருப்போர் தங்களுக்காக சுழன்று காரியங்கள் ஆற்றும் நாள்! இந்தத் திருமணநாளில் திருமண தம்பதிகளுக்கு திராட்சை ரசம் தீர்ந்துபோனது என்ற செய்தியை அறிவித்திருக்க மாட்டார்கள்!

அவர்கள் மகிழ்ச்சி மங்கிவிடக்கூடாது என்ற நல் எண்ணத்தினால் அவர்களுக்கு இச்செய்தியை சொல்லாமல் விட்டிருக்கலாம். அவர்கள் தேவையிலிருந்தார்கள் ஆனால் அவர்களோ அதை அறியாதிருந்திருப்பார்கள்.

வாலிபர்களே! **நாம் இங்கு ஒன்றை சிந்திக்க வேண்டும்!** நாம் இரட்சிக்கப்படும்படியான தேவை உடையவர்கள்! ஆனால் நம்மில் எத்தனை பேர் அதை அறிந்திருக்கிறோம். அந்த மணமக்களை சுற்றி இருந்தவர்கள் குறைவின் செய்தியை சொல்லாமலிருந்தது போல்! நமது மகிழ்ச்சியை குறைக்கக் கூடாது என்று சிலர் நினைத்து அல்லது அவர்களது மகிழ்ச்சியும் சேர்ந்து கெட்டுவிடும் என்ற சுயநல விருப்பம் கொண்டு நம்மிடம் இச்செய்தியை மறைத்துவிடுவார்கள்! ஆனாலும் வாலிபர்களாகிய நாம் காரியங்கள் ஒழுங்காக இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்! நாம் ஜீவத் தண்ணீரை கேட்கும் முன், தாகம் கொண்டவர்களாக கேட்க வேண்டும். நாம் ஜீவ அப்பத்தை புசிக்கும்முன் ஆத்மீக பசி உள்ளவர்களாக அதை உட்கொள்ள வேண்டும்.

வாலிபர்களே! இப்பொழுது மணமக்களை தனியே விட்டுவிட்டு நமது பார்வையை இயேசுவின் தாயாகிய மரியாளிடம் திருப்பி, சில காரியங்களை கவனிப்போம். தான் பெற்ற தலை மகனின் பிறப்பே அற்புதப் பிறப்பு! அவர் அரசுக்கு முடிவில்லை என்கிற விஷயங்களை எல்லாம் நெஞ்சார நினைத்துக் கொண்டிருந்த அந்தத் தாய், இப்பொழுது திருமண வீட்டிலிருந்த குறையை இயேசுவிடம் தெரிவித்தாள்! தாய் என்கிற ஸ்தானத்தை பயன்படுத்தி கட்டளையாக அதைச் சொல்லாமல், கனிவாக கருணை நாதரிடம் கோரிக்கை வைக்கிறாள்! வாலிபர்களே! நம்முடைய வாழ்வில் வரும் குறைவுகளை யாரிடம் எடுத்துச் சொல்லவேண்டும்! எப்படி எடுத்துச் சொல்லவேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். மனிதனிடம் முறையிடுவதை விடுத்து இறைவனை நாடி அவர் பாதமே தஞ்சம் என நின்றாள் மரியாள்! ரசம் குறைந்தவுடன் அவ்வீட்டின் முக்கிய நபரிடத்தில் அவள் சென்று சொல்லியிருக்கலாம்! ஆனால் அவளோ அப்படி செய்யாமல்! **இல்லாதவர்கள் தங்களை உண்மையாக நாடி வந்தால் உள்ளம் உருகும் இயேசுவிடம் சென்றாள்!** வாலிபர்களே! நாமும் அப்படியே செய்ய வேண்டும்.

இயேசுவின் தாயாகிய மரியாள் வைத்த கோரிக்கைக்கு இயேசு தந்த பதில் தான் என்ன? **"ஸ்திரீயே எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார்"** (யோவான். 2;4). வாலிபர்களாகிய நீங்கள் ஏன் இயேசு தன் தாயை **"ஸ்திரீயே"** என்று அழைக்கிறார். அன்பின் வடிவம் அல்லவா

தாய், அவர்களை ஏன் **"ஸ்திரீயே"** என்று இயேசு பெருமான் அழைக்க வேண்டும் என்கிற வினா வாலிபர்களாகிய உங்கள் உள்ளத்தில் எழுவது நிச்சயம். நமது ஆண்டவர் **அராமிக்** என்னும் மொழியில் பேசியிருக்கிறார் என்பதை நாம் முதலாவது அறிந்து கொள்ள வேண்டும். **"ஸ்திரீயே" என்கிற பதத்திற்கு ஏற்ற அராமிக் பதத்தின் உச்சரிப்பை வைத்துத்தான் அதின் மரியாதையை கணக்கிட முடியுமாம்.** நமது ஆண்டவரின் தாய் அன்பின் வடிவம் என்றால், அன்பின் தோற்றம், உருவம், வடிவம், வெளிப்பாடு இவை எல்லாவற்றின் ஊற்றாகிய நமது ஆண்டவர், தமது தாயை தரக்குறைவாய் பேசியிருப்பாரா? இல்லை, இல்லை நிச்சயம் இல்லை. இப்படிப்பட்ட நினைப்பின் நிழல் கூட நமக்கு வேண்டாம். மரியாதையுடனேயே **"ஸ்திரீயே"** என்கிற பதத்தின் அராமிக் வார்த்தையை ஆதி வார்த்தையான நமதாண்டவர் மொழிந்திருப்பார் என்பதில் சந்தேகம் என்ன? புல்லின் நுனியளவு சந்தேகம் கூட உங்களுக்கு வேண்டாம் வாலிபர்களே!

இயேசுவின் தாயாகிய மரியாள் இப்பதிலை கேட்டிருப்பாள், **"என் வேளை இன்னும் வரவில்லை"** என்கிறாரே என்ன அர்த்தத்தில் இவ்வார்த்தைகளைச் சொன்னார் என்று யோசித்திருக்கக் கூடும். இயேசு தாம் சிலுவையில் மரித்து பிதாவினால் மகிமையடையும் படி உயிர்ப்பிக்கும் வேளையையே, அதாவது கிறிஸ்துவாக, வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகாரம் உடையவராக அவர் உயர்த்தப்படும் அவ்வேளையையே அவர் என் வேளை இன்னும் வரவில்லை என்று குறிப்பிடுகிறார். (யோவான். 12;23,24). பழைய திராட்சை ரசமாகிய பழைய ஏற்பாடு முடிந்து தித்திக்கும் திராட்சை ரசமாகிய புதிய ஏற்பாட்டை தான் தரும் வேளை இன்னும் வரவில்லை. (கொ.2:14) என்ற கருத்தை தன் மனதில் சிந்தித்தபடி இப்படி மொழிந்தாரோ நமது ஆண்டவர். லூக்கா 5ம் அதிகாரத்தின் 37ம் வசனத்தில் இயேசு கூறுவதைக் கவனியுங்கள். **"ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்து வைக்கமாட்டான்; வார்த்துவைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்"** என்கிறார். மெய்யான திராட்சை செடி தந்த புது ரசமாகிய புதிய ஏற்பாட்டை பெற்ற நாம் அவரின் கட்டளைப்படி நடந்து அவர்தம் அன்பை பெற முயற்சிப்போம். தேவனுக்கு சித்தமானால் கலியாண வீட்டில் நாம் கவனிக்காமல் விட்ட மற்றவர்களை அடுத்த இதழில் சந்திப்போம்! அதுவரைக்கும் கைவிடாத கர்த்தர் உங்களைக் காப்பராக! ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# ஏசாயா ஒரு கண்ணோட்டம்

1. **காலம்** : சுமார் 735-725 கி.மு.

2. **ஆசிரியர்** : ஏசாயா தீர்க்கன் என்று பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

## இந்நூல் பற்றி ...

1. ஏசாயா என்ற பெயருக்கு, "யெகோவாவே இரட்சிப்பு" என்று பொருள்படும்.

2. ஏசாயாவின் தகப்பன் ஆமோத், அமாசியா ராஜாவின் சகோதரன் என்று பிற தகவல்கள் கூறுகிறது. இவ்வுறவை வைத்துப் பார்க்கும்போது உசியா ராஜாவுக்கு ஏசாயா சகோதரனாக இருக்கிறார்.

3. ஏசாயா தீர்க்கன், அரசனுக்கு உறவாக இருந்தபடியால், எளிதாக அரண்மனைக்குள் செல்லவும் தகவல்களை பரிமாறவும் முடிந்தது.

4. மனாசே என்னும் அரசனால் இவர் வாளால் அறுப்புண்டு மரித்திருக்கலாம் என்று வரலாறு தகவல்கள் கூறுகிறது. (எபி. 11;37).

5. இந்நூலின் 40 முதல் 66 அதிகாரம் முடிய வேறு ஒரு ஏசாயா பாபிலோனிய அடிமைத்தனத்தின் போது எழுதியிருக்க வேண்டும் என்று சிலரால் கூறப்பட்டாலும், இப்பகுதிக்கும், 1-39 அதிகாரப் பகுதிக்குமுள்ள ஒற்றுமை, தொடர்பு, மொழி நடை இவைகளை வைத்துப் பார்க்கும் போது இதற்கு வாய்ப்பில்லை என்று தெரிகிறது.

6. இத் தீர்க்கனின் நூலிலிருந்து தான் இயேசுவாலும், புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களாலும் அதிகமான மேற்கோள்கள் காட்டப்பட்டிருக்கிறது. ஏனைய எல்லா தீர்க்கதரிசன நூல்களின் மேற்கோள்களையும் ஒன்று சேர்த்தால் கூட இது தான் மிஞ்சி நிற்கிறது.

7. ஏசாயா தீர்க்கனை பழைய ஏற்பாட்டின் பவுல் என்று அழைப்பார்கள்.

## இந்நூலின் செய்தி ...


1. யெகோவாவின் மீது உங்கள் விசுவாசத்தை வையுங்கள் - என்பது பிரதான செய்தி.

2. தேவன் பரிசுத்தமும், கண்டிப்பும் உடையவராகவே இருக்கிறார்.

3. மீந்தவர்கள் தேவனுடைய மீட்பின் திட்டத்தை நிறைவேற்றுவார்கள்.

4. மேசியாவின் தன்மையும், அவருடைய ராஜ்யத்தைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது.

# இயேசு மரணத்திலிருந்து எழுந்தாரா?



An olive garden on the Mount of Olives. Jesus and His friends spent time together in a garden like this.

எனக்குப் பிரியமான சின்னத்தம்பி தங்கைகளே, இவ்வருடத்தின் இரண்டாவது மாதத்தில், இக்கட்டுரையின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். சிறுவர் பகுதியை நீங்கள் தொடர்ந்து தவறாமல் படித்துப் பயனடைந்து வருவீர்கள் என நம்புகிறேன். நம்முடைய சிறுபிராயத்திலிருந்தே நாம் தெளிவுடன் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு நல்ல தலைப்பைத் தேவன் இம்மாதம் தந்துள்ளார். ஆகவே, கவனமாகப் படிப்போமாக.

உங்கள் நண்பர்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களோ உங்களிடம் ஏன் இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்புகிறாய் என்று கேட்டால், என்ன சொல்லுவீர்கள்? ஒரு வேளை உங்களில் சிலர், இப்படி நடந்தது உண்மை யென்று என் அம்மா சொன்னார்கள் என்றும், வேறு சிலர், எங்கள் சபை ஊழியர் அப்படிக் கூறினார் என்றும் சொல்லக் கூடும். ஆனால், உங்கள் நண்பர்கள், இப்படிக் கூறுவது, அந்த உண்மையை நம்புவதற்குப் போதுமான காரணங்களாக இல்லையே என்று வாதிடுவர். இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கு இவை போதுமான காரணங்களல்ல.

நாம் யோசிப்பதற்கும், பகுத்துப் பார்ப்பதற்கும் தேவையான திராணியை தேவன் நமக்குத் தந்திருக்கிறார். ஒன்றும், ஒன்றும் இரண்டு என்று நமக்குத் தெரியும். நாம் விரும்பும் இடத்திற்கு எப்படிச் சுலபமாகப் போகமுடியும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இயேசுவைப் பற்றிய சாட்சிகளையும், உண்மைகளையும் நாம் சோதித்தறிய வேண்டுமென நம்முடைய பரலோக தேவன் விரும்புகிறார்.

பழைய ஏற்பாடு, இயேசுவைப் பற்றிய 360 தீர்க்க தரிசனங்களைக் கொண்டுள்ளது. அவைகளில் சில அவருடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் பற்றியது, இயேசு பிறப்பதற்கு சுமார் 500 ஆண்டுகள் முன்பாக, சகரியா என்னும், தீர்க்கதரிசி, அவருடைய சீடர்களை ஆடுகள் என விவரித்துள்ளார். மேய்ப்பனை அடிக்கும் போது (மரிக்கும் போது) ஆடுகள் சிதறிப்போகும் என்று அவன் முன்னுரைத்துள்ளான். (சக.13:7). இயேசு கைதானபோது அது

அப்படியே நடந்தது. கிறிஸ்து மரித்த போது, தங்கள் போதகர் முடிந்தார் என்று பயந்து சீடர்கள் ஓடிப்போனார்கள். ஆனால், பயந்து ஓடின அந்த சீடர்கள் தங்கள் எண்ணங்களை மீண்டும் மாற்றிக் கொண்டார்கள். ஏன் உயிர்த்த இயேசுவைத் தாங்கள் கண்டோம் என்றார்கள்.

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ந்தார் என்று சீடர்கள் சொன்னால், அது உண்மையா அல்லது பொய்யா என்று சீடர்களுக்குத் தெரியும். இயேசு உயிர்த்தெழுந்தார் என்று பொய் சொல்லுவதினோல் அவர்களுக்கு எந்த லாபமும் இல்லை. ஏனெனில், அந்த உயிர்த்தெழுதலைப் பற்றிப் பிரசங்கித்ததினால் சீடர்களில் அநேகர் மரித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களின் போதனைகளை நாம் விசுவாசிக்க முடியும்.

பவுல் அப்போஸ்தலன், கிறிஸ்தவர்களை அடித்துக் காவலில் வைத்துத் துன்பப்படுத்தினான். ஆனால், தன் செயல்பாட்டைத் திடீரென நிறுத்தி, தானும் கிறிஸ்தவனானான். பவுல் யூதர்களை ஆளுகிறவனாக மாறியிருக்கக் கூடும். அதன் மூலம் அவனுக்குப் பணம், புகழ், அதிகாரம் எல்லாம் கிடைத்திருக்கும். மரித்தோரிலிருந்து எழுந்த இயேசுவைப் பிரசங்கிப்பதற்கு அவன் அவைகளைத் தியாகம் செய்தான்.

செய்தான். அதனால் அவனுக்கு லாபமாக என்ன கிடைத்தது? இவ்வாழ்க்கையில் ஒன்றுமில்லை . தனக்கிருந்த எல்லாவற்றையும் இழந்தான். தனது யூத நண்பர்களும் விரோதிகளானார்கள். அவன் அடிக்கப் பட்டான். தன் வாழ்ந்த நாட்களிலே துரத்தப்பட்டு, உயிர்த்த இயேசுவைப் பிரசங்கித்ததற்காக, இறுதியில் தூக்கிலிடப்பட்டான். அவன் ஏன் அப்படிப் பிரசங்கித்தான்? உயிர்த்த இயேசு, தனக்குக் காட்சி தந்ததினாலே அப்படிப் பிரசங்கித்தான். (அப்.9:1-9)

பவுலின் இந்தச் செய்தியை நாம் நம்ப முடியும். இயேசு உயிர்த்தெழுந்த போது, சீடர்கள் அவரைத் திருடிக் கொண்டு போய்விட்டார்கள் என்ற காவல் காத்த போர்ச் சேவகர்கள் சொல்லும்படி யூத மதத் தலைவர்கள் நிறையப் பணம் கொடுத்தார்கள் (மத்.2812-15). ஆனால், உண்மையில் அந்த சரீரத்திற்கு என்ன ஆயிற்று ? இயேசுவின் மரித்த சரீரம் இருந்திருக்குமானால், அவரின் எதிரிகள் அதைக் காண்பித்திருக்க முடியும். அப்பொழுது, சீடர்கள் உயிர்த்தெழுதலைப் பற்றி கதை கட்டியிருக்க மாட்டார்கள். ஆனால், சீடர்கள் அதைப் பற்றிப் பிரசங்கிப் பதற்காகவே மரித்தார்கள். ஆம், அவருடைய சரீரம் மரணத்திலிருந்து உயிரோடே எழுந்தது.

அப்.6:7,ல் யூத ஆசாரியர்களில் அநேகர் விசுவாசித்துக் கீழ்ப் படிந்தார்கள். இவர்கள் ஒரு சமயத்தில் இயேசுவுக்கு எதிரானவர்கள். தங்கள் எண்ணங்களை என் இவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்? இதற்குப் பதில் மிக எளிது. இயேசுவின் உயிர்த்தெழுதலை மறுக்க முடியவில்லை.

இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்ற போதித்தார். அவர் போதித்தது உண்மை தான் என்ற அவருடைய அற்புதங்கள் நிரூபித்தன. அற்புதங்களில் மிகச் சிறந்தது அவருடைய உயிர்த்தெழுதல். இயேசு தேவனுடைய குமாரனென்று உயிர்த்தெழுதல் நிரூபித்தது. அத்தோடு அவருடைய போதனை களும், வாழ்வும் உண்மையென்று நிரூபணமானது. (ரோம.14)

உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிற நமது இரட்சகளும், மகா பெரிய ராஜாவுமான வருக்கு மகிமை உண்டாவதாக.

**R.A.R. நாயகம்.**

# வெளிப்படுத்தின விசேஷம்

அதி. 20:1-4

**வெ**ளிப்படுத்தல் நூல் முழுவதிலும், இந்த இருபதாம் அதிகாரம் தான், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிற அதிகாரமாகும். இன்னும் சொல்வதானால், இந்த அதிகாரம் பதினைந்தே வசனங்களைக் கொண்டதாக இருந்தாலும், ஒட்டுமொத்த வேதாகமத்தினுள் 1,189 அதிகாரங்களிலும் மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிற அதிகாரமாக இது இருக்கலாம். உதாரணத்திற்கு, ஆயிரம் வருட அரசாட்சி என்ற தவறான கொள்கை, இந்த அதிகாரத்திலே தான் வேர் கொண்டிருக்கிறது. இந்த ஆயிர வருட அரசாட்சிக் கொள்கை, பிரிவினைச் சபைகளடங்கிய **"கிறிஸ்தவத்தில்"** பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இக்கொள்கையின் முக்கியக் கருத்து என்னவெனில், தன்னுடைய இறுதி வருகையில், இயேசு பூமிக்குரிய ஒரு ராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார், அது ஆயிரம் வருடம் நீடிக்கும் என்பதாகும். உண்மையில், ஆயிரம் வருட அரசாட்சி என்பதே, இருக்குமென்று பொய்யாய் நம்பப்படுகின்ற அந்த ஆயிரவருட அரசாட்சிக்கு முன்பான காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையே குறிக்கிறது. இக்குழப்பம் கொள்கையின் பெரும்பகுதி, வெளி. 20-ம் அதிகாரத்தை, (குறிப்பாக 4-6 வசனப்பகுதி) புரட்டுவதிலிருந்து வருகிறது.

ஆயிரம்வருட அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் கற்பனை செய்வதற்கும் மாறாக, இப்பகுதியில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிக் கூட குறிப்பிடப்படவில்லை என்பதை அவர்கள் பார்க்கமுடியும். மேலும், இப்பகுதியில், கிறிஸ்துவின் பூமிக்குரிய ஆளுகை பற்றி, மறைமுகமாகக் கூட குறிப்பிடப்படவில்லை. எருசலேம் என்னும், தாவீதின் சிங்காசனம் என்றும் எதுவும் இவ்வசனங்களில் குறிப்பிடப்படவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால், ஆயிரம் வருட அரசாட்சி என்பது ஒரு தவறான கொள்கை. தவறான இக்கொள்கையை, விசுவாசிப்பவர்களுக்கும், போதிப்பவர்களுக்கும் நித்திய ஆக்கினையாகிய தண்டனை கிடைக்கும். ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கையைத் தாங்கிப் பிடிப்பதற்கான ஆதாரம் எதுவும் வெளி. 20-ல் இல்லை. வேதாகமம் முழுவதிலும் நாம் படிக்கின்ற தேவனுடைய வார்த்தைகள், இக்கொள்கையை வன்மையாக மறுக்கிறது. (இது குறித்து நம்முடைய பின்னணிப்பாடத்தில் பார்த்துள்ளோம்). இப்பொழுது இந்த அதிகாரத்தை நாம் படிக்கிறபடியால், இந்த அதிகாரத்தில் என்ன

**போதிக்கப்படவில்லை** என்பதை கூர்ந்து கவனிப்பதோடு, கர்த்தர் இதில் என்ன போதிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வதற்கும் முயற்சிப்போம்.

இந்த அதிகாரத்தை படிக்க ஆரம்பிக்கும்போது, நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியம் என்னவெனில், இந்த 20-ம் அதிகாரம், கால வரிசையின்படி, வெளி. 19-ற்குப் பின் வருவதல்ல என்பது. வெளி. 19-ம் அதிகாரம், கிறிஸ்துவின் வருகையோடும், அவருடைய எல்லா எதிரிகளின் மீதும் அப்பொழுது பழி தீர்த்து, அவர்களை அக்கினிக் கடலில் தள்ளுவார் என்பதோடும் முடிகிறது. இது உலகத்தின் முடிவாகத்தான் இருக்க முடியும். வெளி. 20-ம் அதிகாரம், உலகத்தின் முடிவுக்கு முன்பாக சாத்தான் கட்டப்படுவதோடு தொடங்குகிறது. எப்படியெனில், முடிவிலே, சாத்தான் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவான் (வெளி. 20;10) முதலாம் வசனத்தில், "**ஒரு தூதன் பாதாளத்தின் திறவு கோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்து இறங்கிவர**" யோவான் கண்டான். வெளி. 3:7-ல், "**தாவீதின் திறவுகோல்**" இயேசுவுக்கு கொடுக்கப்பட்டிருந்தும், வெளி. 20:1-ல் சொல்லப்பட்டிருக்கும், "**தூதன்**", இயேசுக் கிறிஸ்து தான் என்று எண்ணுவதற்கு எந்த முகாந்திரமுமில்லை. வெளி. 9:1ல், எக்காளம் ஊதின ஐந்தாம் தூதனிடம் "**பாதாளக் குழியின் திறவுகோல்**" கொடுக்கப்பட்டது என்று பார்க்கிறோம். இது, வெளி. 20:1-ல் சொல்லப்பட்டிருக்கும் தூதனும், ஒரு வழக்கமான தூதன் என்பதையும், அது, கர்த்தர் அல்ல என்பதையும் குறிக்கிறது. தேவனுடைய வல்லமையினாலும், அதிகாரத்தினாலும், மிகாவேலும், அவனுடைய தூதர்களும், வலுசர்ப்பத்தோடு யுத்தம்பண்ணி ஜெயித்தார்கள் என்று வெளி. 12:7-9ல் பார்க்கலாம். அதே வல்லமையினாலும் அதிகாரத்தினாலும், தேவனுடைய ஒரு தூதன், சாத்தானை ஒரு பெரிய சங்கிலியினால் கட்டி, திறவுகோலை எடுத்து, பாதாள குழியைத் திறந்து, வலுசர்ப்பத்தை அதில் போட முடியாது என்று எண்ணுவதற்கு ஒரு காரணமுமில்லை. உண்மையில், வெளி. 20:2-3, இந்தத் தூதன் சரியாக அதைத்தான் செய்துள்ளான். வசனம் 2-ல், சாத்தான், வலுசர்ப்பம் என்றும் (அதி 12.ஐப் பார்க்கவும். "**பழையபாம்பு**" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது, ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தின் முதல் பாவத்தை நினைவுபடுத்துகிறது. இப்பொழுது, தூதன் சாத்தானைப் பிடித்து பெரிய சங்கிலிகளினால் ஆயிரம் வருஷமளவும் கட்டி வைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும், அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின் மேல் முத்திரை போட்டான்" (20;3).

இங்கே சாத்தான் கட்டப்படுவதைக் குறித்து, ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் மிகத் தவறாகப் புரிந்திருக்கிறார்கள். சொல்லர்த்த ரீதியாக சாத்தான் ஆயிரம் வருட காலத்திற்கு, முழுமையாக முடக்கி வைக்கப்படுவான் என அவர்கள் இதற்கு பொருள் தருகின்றனர். முதலாவது, இங்கே சொல்லப்பட்டிருக்கும் வருஷங்களை சொல்லர்த்த ரீதியில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இப்பகுதியில், சந்தேகத்திற்கிடமில்லாமல் உருவக ரீதியிலானவை உண்டு. அதற்காக, சிலவற்றை உருவக ரீதியிலும், சிலவற்றை சொல்லர்த்த ரீதியிலும் மனம்போன போக்கில் எடுத்துக் கொள்வது முறையாக இருக்காது. நிஜமான சங்கிலியினாலே, நிஜமான பாதாள குழியில் சாத்தான் கட்டப்பட வேண்டியிருந்ததா! அப்படியில்லை. ஆகையால், சொல்லர்த்த முறையில், ஆயிரம் வருடங்களுக்கு, சாத்தான் கட்டப்படுவான் என்று எண்ணுவதற்கு ஏதாவதொரு காரணம் இருக்கிறதா? இல்லை எண் "ஆயிரம்" என்பது, ஏதாவதொரு பெரிய எண்களை அடையாளப்படுத்துவதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. வெளி. 5;11, இப்படியாகத்தான் உள்ளது. அங்கே, தேவனுடைய ஆயிரம், பதினாயிரமான தேவ தூதர்கள் (எபி. 12;22) உருவக ரீதியில் "அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது" என்று எண்ணப்பட்டிருக்கிறது. இன்னும், இந்த எண் ஆயிரம், வெளி. 7 மற்றும் 14-ம் அதிகாரங்களில், எண் 12-ன் பெருக்கல் மடங்காக, தேவனால், மீட்கப்பட்ட "ஒருவரும் எண்ணக்கூடாத திரளான கூட்ட ஜனங்களை" (வெளி. 7:9) குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. வெளி. 9:16, ஒரு மிகப் பெரிய குதிரைச் சேனைகளாகிய இராணுவத்தை இவ்விதம், "இருநூறு ஆயிரம் ஆயிரம்" என்று (2 கோடி) எண்ணிக்கையாயிருக்கிறது. வெளி. 21:16-ல், பரலோகம் நரகம் நாலா திசைகளிலும் "பன்னீராயிரம் ஸ்தாதியாயிருந்தது" என்று தொகையிடப்பட்டிருக்கிறது. ஆகையால், சாத்தான் ஆயிரம் வருடங்களுக்குக் கட்டப்படுவான் என்பதும், கிறிஸ்துவின் இரத்த சாட்சிகள் கர்த்தரோடு ஆயிரம் வருஷங்கள் அரசாளுவார்கள் என்பதும், காலவரையற்ற, ஒரு நீண்ட கால அளவை குறிப்பதாக இருக்க முடியும்.

மேலுமாக, **"கட்டப்படுதல்"** என்பதின் பொருள், இக்கொள்கைக்காரர்கள் சொல்வதுபோல், செயல்பாடுகள் முற்றிலும் முடக்கப்படுவதாக இருக்காது. **"கட்டப்படுதல்"** என்பதற்கான கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, யோவான் ஸ்நானகன் கட்டப்பட்டான் (மத். 14:13, மாற்கு. 6;18). ஆனாலும், செயல்பட்டுக் கொண்டிருந்தான் (லூக். 7;18-22). கழுதைக் குட்டி கட்டப்பட்டிருந்தது (மத். 21;2) ஆனால், அதற்குப் பின்னாக யாராவது நின்றிருந்தால், அது மிகவும்

சுறுசுறுப்பாகவே இருந்திருக்கும்! இயேசு கட்டப்பட்டார். (மத்.27;2 மாற்கு. 15;1; யோவான். 18;12-24). ஆனாலும், நம்மைப் பாவங்களிலிருந்து இரட்சிக்கும்படியாய், பிதாவுக்குக் கீழ்ப்படிவதிலே சுறுசுறுப்பாகவே இருந்தார். கூனியாயிருந்த ஸ்திரீ கட்டப்பட்டிருந்தும் அவள் செயல்பாடுடையவளாகவே இருந்துள்ளாள் (லூக். 13:10:16). லாசரு கட்டப்பட்டிருந்தான் (யோவான். 11;43,44). ஆனாலும், அழைத்தபோது, அவனால் **"வெளியேவர"** முடிந்தது. பவுல் சிறையிலே கட்டப்பட்டிருந்தான் (கொலோ. 4;3). ஆனாலும், அவன் பிரசங்கித்தான் (அப்.28;31). ஆத்துமாக்களை ஆதாயம் செய்தான். (பில.10). சாத்தானே கூட இன்னுமொரு உதாரணம். ஆம், அவன் புறம்பாகத் தள்ளப்பட்டான். (யோவான். 12;31). ஆனாலும், இன்னும் **"சுற்றித் திரிகிறான்"** (1. பேதுரு 5;8). வேறு சில சந்தர்ப்பங்களிலும், சாத்தானில் செயல்பாடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், முற்றிலும் முடமாக்கப்படவில்லை. (மத். 12;2 ; லூக். 10;17-18; யோவான். 12;31; கெ லோ. 2;15 எபி. 2;14 1. யோவான். 3;8 வெளி. 12;9-11). அதே போலவே, சாத்தான் ஆயிரம் வருடங்களுக்கு கட்டப்பட்டபோது, ஒருவகையில், அவன் **கட்டுப்படுத்தப்பட்டானேயொழிய** அவன் செயல்பாடுகள் முற்றிலும் முடமாக்கப்பட்டு நிறுத்தப்படவில்லை.

அப்படியானால், இங்கே ஒரு கேள்வி வருகிறது. அது நீண்ட காலத்துக்கு இருக்கும்படி சாத்தான் கட்டி வைக்கப்படுதல் என்றால் என்ன? என்பது. வெளி. 20:3-ம் வசனம், சாத்தான் கட்டி வைக்கப்படுவதற்கான நோக்கத்தைச் சொல்கிறது. **"அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதன் மேல் முத்திரை போட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக் காலம் விடுதலையாக வேண்டும்"** தேசங்களை மோசம் போக்காதபடிக்கு, சாத்தான் கட்டப்பட்டான் அல்லது கட்டுப்படுத்தப்பட்டான். இது, சாத்தான் தனிப்பட்டவர்களை மோசம் போக்கமாட்டான் என்று சொல்லவில்லை. ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் பிசாசின் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான். (1. பேதுரு. 5;8,9). ஆனால், இந்த நீண்ட கால கட்டத்திற்கு, சாத்தான் மொத்தத்திற்கு தேசங்களை மோசம் போக்காதபடிக்கு கட்டுப்படுத்தப்பட்டான். அவன் இந்தக் காவலிலிருந்து **விடுதலை** ஆனவுடன், பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளை மோசம் போக்கினான். (வெளி. 20;7-9).

வெளி. 20;4-ல், யோவான், **"சிங்காசனங்களையும், அவைகளில் உட்கார்ந்திருக்கிறவர்களையும், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நியாயத் தீர்ப்பையும் கண்டான்"** இந்த சிங்காசனங்களின் மீது உட்கார்ந்திருந்தவர்கள் யார்? யோவான், இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய

ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது, அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன்" என்று கூறுகிறார். (வெளி. 20:4). இந்த மிருகத்தையும் அதின் சொரூபத்தையும், அதின் முத்திரையையும் நாம் முதலில் வெளி. 13-ம் அதிகாரத்தில் வாசித்தோம். இந்த மிருகத்தையும், அதின் சொ்ரூபத்தையும், வணங்கியவர்களும், அதன் முத்திரையைத் தங்கள் நெற்றிகளிலும், கைகளிலும் தரித்துக் கொண்டவர்களும் தங்கள் நித்தியத்தை நரகத்தில் கழிப்பார்கள் என்று வெளி. 14:9-11 வசனப் பகுதியிலிருந்து கற்கிறோம். அவர்களனைவரும் கொடிய புண்களை பெற்றுக் கொள்கிறார்கள் (வெளி. 16;2) வெளி. 19:20-ல், மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் கந்தகம் எரிகிற அக்கினி கடலிலே தள்ளப்பட்டார்கள் என்றுள்ளது. இதற்கு மாறாக, வெளி. 15;2-4 வசனப் பகுதியானது, மிருகத்தின் மீது, அதன் சொரூபத்தின் மீது, அதன் முத்திரையின்மீதும், நாமத்தின் இலக்கத்தின் மீதும், ஜெயங்கொண்டவர்கள், தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக் கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதை விவரிக்கிறது. இந்த நூல் முழுவதும், ஜெயங்கொள்ளுதலின் செய்தியை நாம் பார்த்தோம். வெளிப்படுத்தல் இரண்டாம், மூன்றாம் அதிகாரங்களில், ஜெயங்கொள்ளுகிற அனைவருக்கும் மகத்தான, நித்தியமான ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. (வெளி.2;7,11,17,26, 3;5,12,21) இயேசு பிசாசை மேற்கொண்டார். (வெளி. 3;21). அப்படியே தன்னுடைய விரோதிகள் யாவர் மீதும் ஜெயங்கொள்ளுவார் (வெளி. 17;14). கிறிஸ்தவர்கள், ஆட்டுக்குட்டியானவரின், இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும், தங்கள் ஜீவனையும் பொருட்படுத்தாமல் பிசாசை மேற்கொள்ளுகிறார்கள் (வெளி. 12;11). இவர்கள் தான் மிருகத்தையும் அதன் சொரூபத்தையும், அதின் முத்திரையையும், அதின் நாமத்தின் இலக்கத்தையும் மேற்கொண்டார்கள் (15;2). வெற்றிவாகை சூடின இதே கிறிஸ்தவர்களை வெளி. 20;4-ல் பார்க்கிறோம். அவர்கள் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களாக இருந்தும், சிங்காசனங்களின் மீது ஜெயமாக உட்கார்ந்திருக்கிறார்கள். இம்மகத்தான நூலில், துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்கான ஊக்கமளிக்கும் செய்தி திரும்பவும் வருகிறது. வெளி. 21;7, இச்செய்தியை இவ்வகையில் தொகுத்துத் தருகிறது; **"ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்"** (21;7).

வெளி. 20:4 சிரச்சேதம் பண்ணப்பட்ட இந்த கிறிஸ்துவின் இரத்த சாட்சிகள் **"உயிர்த்துக் கிறிஸ்துவுடனே ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்"** என்று சொல்கிறது. இந்த வசனம், கிறிஸ்துவின் ஆளுகைக்கு எல்லை குறிக்கப்படாமல், இந்த குறிப்பிட்ட இரத்த சாட்சிகள் செய்கிறதற்கான கால

அளவு விளக்கப்பட்டிருக்கிறதென்பது கவனிக்கத் தக்கது. ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கைக்காரர்கள், சொல்லர்த்த ரீதியிலான ஆயிரம் வருஷத்திற்கு, கிறிஸ்து பூமியில் அரசாளுவார் என்று சொல்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவின் ஆளுகைக்கு முடிவிராது என்று வேதாகமம் கூறுகிறது. காபிரியேல் தூதன், மரியாளிடம், அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருமடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றும் அரசாளுவார் அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" என்று சொன்னான் (லூக். 1;32,33). மேலும் வெளி. 11;15, கிறிஸ்து, "சதாககாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்" என்று சொல்கிறது. கிறிஸ்து இப்பொழுது தாவீதின் சிங்காசனத்திலிருந்து, சபையாகிய, தம்முடைய ராஜ்யத்தின்மேல் ஆளுகை செய்கிறார். இந்த ஆளுகை பூமியின் கால அளவையும் கடந்ததாயிருக்கிறது (மத். 18;18-29; யோவான். 18;36.37; அப். 2;29-36 எபே. 1;22,23, 5;23, கொலோ, 1;13,18) கிறிஸ்துவின் ஆளுகை, கல்லறையையும் இந்த உலகத்தையும் கடந்ததாயிருந்தது, நித்தியகாலமாக நிலைத்திருக்கும் (தானி. 2;44,45; மத். 16;18,19, எபே. 3;10,11, 21; எபி. 12;28 2. பேதுரு 1;11). ஆகவே, இந்த இரத்த சாட்சிகள் கிறிஸ்துவுடனே கூட ஆளுகை செய்யும் காலம், கிறிஸ்துவின் ஒட்டுமொத்த ஆளுகையில் ஒரு பகுதயிாகவே இருக்கும். தேவனுடைய வசனத்தினிமித்தம் சிரச்சேதம் பண்ணப்பட்டு, மிருகத்தையும், அதன் சொரூபத்தையும், அதன் நாமத்தையும் மேற்கொண்ட இவர்கள். கல்லறையின் மறுபக்கத்தில் கிறிஸ்துவுடனே ஆளுகை செய்கிறார்கள் என விவரிக்கப்பட்டிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். கிறிஸ்துவுடனே ஆளுகை செய்யும் இவர்கள் மரித்துப் போவார்கள். பூமியில் உயிருடன் வாழ்பவர்கள் அல்ல. மரித்துப் போன நீதிமான்கள், உலகத்தின் முடிவிலான உயிர்த்தெழுதல் வரைக்கும் காத்திருக்கும் இடமாகிய பரதீசிலே வாழ்ந்துகொண்டிருப்பார்கள். (லூக். 16;19-26; 23:43) அவர்கள் சிங்காசனம் பரதீசிலே இருக்க வேண்டுமேயொழிய கண்டிப்பாக பூமியிலிராது. இயேசுவானவர், பரலோகில் இப்பொழுது ஆளுகை செய்கிறார். (அப். 2;29-37). கிறிஸ்து, இப்பூமியில் இனி ஒரு போதும் கால்வைக்கப்போவதில்லை. (1. தெச. 4;14-17). ஆகையால், வெளிப்படுத்த 20-ம் அதிகாரத்திலோ அல்லது வேதாகமத்தின் எந்தப் பகுதியிலோ கிறிஸ்துவின் பூமிக்குரிய ஆளுகை பற்றி எதுவும் பேசப்படவில்லையென்பதைக் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த விபரீதக் கொள்கை மனிதர்களுடைய கற்பனைகளையும், ஞானத்தையும் சேர்ந்ததேயொழிய வேறொன்றுமில்லை.

**EZSR** **JON MACON**

# சபைக்கு திருமறைப் பெயர்கள் மட்டுமே கொடுக்கப்படுகிறது

இன்றைய மார்க்க உலகை ஒருவர் கண்ணுற்றால், கிறிஸ்து மரித்த சபைக்கு நூற்றுக்கணக்கான பெயர்கள் கொடுக்கப்பட்டு அழைத்துக் கொள்வதைக் காணலாம். ஆகிலும் தேவ வசனத்தில் ஒரு விரைவான (கன நேர) கண்ணோட்டம் விட்டால், இப்படிப்பட்ட பெயர்கள் திருமறைக்கு அப்பாற்பட்டவைகள் என்பதையும், திருமறையில் காணப்படுவதில்லை என்பதையும் காணலாம். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நாம், மேற்குறித்த பெயர்கள் நமது மார்க்க வட்டத்தில் அளவீடாகிய திருமறைக்குட்பட்டதாயிராதபடியினால், அந்தப் பெயர்களை நாம் தரித்துக் கொண்டிருப்பது அஞ்ஞானமும், அவமரியாதையுமாகும்.

## மனிதப் பெயர்கள் ஏன் தவறானவை?

புதிய ஏற்பாட்டில் அவைகள் கடிந்து கொள்ளப்படுவதால்தான். கொரிந்துப் பட்டணத்துச் சபைக்கு பவுல் எழுதிய தமது நிருபத்தில் பின் வரும் வார்த்தைகளை எழுதுகிறார். **"சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்திருக்கவும், வேண்டுமென்று புத்தி சொல்லுகிறேன்"** என்று எழுதுகிறார் (1. கொரி. 1;10). தாம் கூறிய கருத்து என்ன என்பதை தொடர்ந்து வரும் வசனங்களில் விளக்கமளிக்கிறார். **"உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயே ஞானஸ்நானம் பெற்றீர்கள்?"** (1. கொரி. 1;12,13) கிறிஸ்துவுக்கு மேலாக **"லூதர்"** போன்ற நபர்களுக்கு கனப்படுத்திக் கொடுக்கப்படும் பெயர்கள் கிறிஸ்துவுக்குரிய கனத்தை திசை திருப்பும் செயலாகும். **"ஞானஸ்நாம்"** (பேப்திஸ்து) போன்ற ஆசாரங்களை சபை பெயருக்கு முக்கியப்படுத்துவது, எல்லா நாமத்திற்கும் மேலான கிறிஸ்துவின் நாமத்திற்கு மேலாக உயர்த்துவதாகும். சபையின் ஆளுகை அமைப்பை மேன்மைப்படுத்துவதை குறிக்கும்படி, சபையை **"எபிஸ்கோஸ்"** அல்லது **"பிரிஸ்பிட்டேரியன்"** என்றெல்லாம் அழைப்பது தேவனே எண்ணிப் பாராதவை.

மனிதன் சுயக் கற்பனையில் உண்டான மதப்பட்டங்களை எதிர்த்து, பவுல் ஆதி சபையை எச்சரித்தார்; கிறிஸ்துவின் சபையராகிய நாங்கள் அவரது அந்த வேண்டுகோளை இன்னும் ஏற்றுக் கொள்கிறோம். பெயரைக் காப்பாற்ற அதன்படி நடக்கவும், பற்றிக் கொள்வதும் அவசியமாகும்.

## சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள திருமறைப் பெயர்கள்

திருமறையில் சபைக்கென்று பிரத்தியோகமான பெயர் ஏதும் கொடுக்கப்படவில்லை. தேவன் தமது சபையை பின்வருமாறும் அடையாளப்படுத்துகிறார்.

**"தேவனுடைய சபை"** (1. கொரி. 1;2)
**"முதற்பேரானவரின் சபை"** (எபி. 12;23)
**"கிறிஸ்துவின் சபையார்"** (ரோமர். 16;16)
**"கிறிஸ்துவின் மணவாட்டி"** (வெளி. 21;2)
**"தேவனுடைய வீடு"** (1. தீமோ. 3;15).

கவனியுங்கள். இந்தக் குறிப்புகளெல்லாம் நாமகரணக் கூட்டப் பெயர்களல்ல. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிச் சபையைக் குறிப்பதில்லை. மாறாக அனைத்துமே தேவனுடைய ஒரே சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள மாறுபட்ட குறிப்புகள். இவைகள் ஒவ்வொன்றிலும் தேவன் அல்லது அவருடைய குமாரனுடைய நாமமே மகிமைப்படுத்தப்பட்டுள்ளதா. தேவன் இந்தப் பெயர்களை தமது சபைக்கு தரித்திருக்கிறார்.

## பெயர் வசன ரீதியான சபையை உருவாக்குமா?

இக்கேள்வி நியாயமானதொன்றாகும். ஏனெனில் இன்று அநேக சபைகள் கிறிஸ்துவின் சபை என்றே பெயரிட்டுக் கொண்டுள்ளன. இருந்தும், நாம் அவைகளை அலசிப் பார்ப்போமாகில், அவர்களின் அநேக ஆசரிப்புகளை புதிய ஏற்பாட்டு மாதிரியின்படி, கண்டுபிடிக்க இயலாது. பெயர் என்பது சரியான நோக்கில் அடி எடுத்து வைக்கப்படும் ஒரு படியாகும். கிறிஸ்துவின் சபை, தேவ சபை, முதற்பேறானவரின் சபை என்றெல்லாம் பெயர் வைத்துக் கொள்வது மாத்திரம் அவருடைய உண்மையான சபை ஆகிவிடாது. ஆளுகை அமைப்பும், ஊழியமும், ஆராதனையும், நோக்கமும் வசனரீதியாக இராவிடில், பிறகு அது கிறிஸ்துவின் சபையல்ல. அநேக சபைகள் சரியான பெயரைத் தரித்துக் கொண்டிருந்தும், தேவன் அனுமதிக்காத, ஆராதனை

முறையில் சில காரியங்களைக் கூட்டுவதன் மூலம் வசனத்தின் திட்டத்தை கெடுக்கின்றனர். வசன ஆதாரத்தைக் கொண்டு சரியென நிரூபிக்கப்படாத எந்தச் செயலும், கண்டிக்கத் தக்கவை (1. தெச. 5;21) கிறிஸ்துவே தமது சபைக்கு ஸ்தாபகரும், எல்லாவற்றுக்கும் மேலான தலையாயுமிருக்கிறார். (எபே. 5;23,24, கொலோ. 1;18-ஐக் காண்க).

## கிறிஸ்தவப் பெயர்

கிறிஸ்துவின் சபையார் தங்கள் ஆராதனைக் கட்டிடங்கள் மீது கிறிஸ்துவின் நாமத்தை எழுதி, நாம் யாருக்குரியவர்கள் என்பதை காட்டுகிறோம். இருப்பினும் பலதரப்பட்ட சமுதாயங்களின் மத்தியில் நாம் வாழும்போதும், நமது அன்றாடப் பணிகளைச் செய்யும்போதும், நாம் **"கிறிஸ்துவின் சபையார்"** என்றழைக்கப்படாமல், கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அழைக்கப்படுகிறோம். தேவன் தமது ஜனங்களை, கிறிஸ்தவர்கள், பரிசுத்தவான்கள், பிள்ளைகள், ஆசாரியக் கூட்டம் மற்றும் சகோதரர்கள் என்றெல்லாம் குறிப்பிடுகிறார். நமக்குக் கொடுக்கப்படும் **"கிறிஸ்தவன்"** எனும் பதமே, நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்பதை அடையாளப்படுத்துகிறது. (அப். 11;26). தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டதால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்தவான் என்றழைக்கப்படுகிறான் (ரோமர். 1;7). அவன் மறுபிறப்பை அடைந்திருப்பதால் தேவனுடைய குமாரன் என அழைக்கப்படுகிறான். (1. பேதுரு 1;22,23). கிறிஸ்துவை அறிந்து கொண்டுவருவதால் சீஷர்கள் (யோவான். 15;8) என்றும்; கிறிஸ்து மூலமாய் நேரடியாகத் தேவனைத் தொழுது கொள்வதால் ஆசாரியர்கள் என்றும் அழைக்கப்பட அதிகாரம் பெற்று உள்ளனர். (1. பேதுரு 2;5). கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒரே பரலோகப் பிதாவின் பிள்ளைகளாயிருப்பதால், சகோதரர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். (கலாத்தியார். 6;1).

தேவனிடத்தில் அன்பையும் மரியாதையையும் காட்டும் யாரும் அவரால் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயரை பாராட்டுவர். பிரிவினைகளை உண்டாக்கி, தேவனுடைய அதிகாரத்தை அவமரியாதைக்குள்ளாக்கும் பெயர்கள் தரித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், தேவன் நமக்குக் கொடுத்துள்ள இந்தப் பெயர்களை நாம் பயன்படுத்த வேண்டும். உங்களில் உள்ள மனமாற்றம், அல்லது விசுவாசத்தை நீங்கள் வெளிப்படுத்திக் காட்ட, ஏதாவதொரு நாமகரணக் கூட்டத்தை நீங்கள் சுட்டிக் காட்டினால், அது

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பெயரோடு எளிய முறையில் கிறிஸ்தவன் என்று மட்டும் ஏன் அழைக்கப்படக் கூடாது?

## பெயரில் என்ன இருக்கிறது?

பெயரில் என்ன இருக்கிறது? என்று ஒருவர் கேட்கலாம். மிக அதிகமானபேர் பெயரில் ஒன்றுமில்லை என நினைக்கின்றனர். அப்.4;12-ன்படி, இவர்களின் இப்படிப்பட்ட கூற்றை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். எல்லா நாமங்களுக்கும் (பெயர்களுக்கும்) மேலான நாமம் ஒன்று உள்ளது. அது கிறிஸ்துவின் நாமம். கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு ஒப்பான அதிகாரம் பெற்றவர் எவருமில்லை. அவரது நாமமே சபைக்கு பயன்படுத்த வேண்டும் என்பதை தேவன் சரியெனக் கண்டால், அதை மாற்றியமைக்க நாம் யார்?

விஸ்கி என்றழைக்கப்படும் மதுவகையோ அல்லது நாட்டுச் சாராயமோ காய்ச்சிய குற்றத்திற்காக ஒரு மனிதன் கைதாக்கப்பட்ட ஒரு கதையைக் குறித்துக் கேள்விப்பட்டேன். சபை ஆராதனையில் கலந்து கொண்டிருக்கும் ஒரு நீதிபதிக்கு முன்பாக அவன் வந்தான். அந்த நீதிபதி குற்றவாளியினிடத்தில் தாமாகவே பேச விரும்பினார். எனவே அவனைப் பார்த்து, "உன் பெயர் என்னவென்று நீதிபதி கேட்டார். அதற்குக் குற்றவாளி, **"என் பெயர் யோசுவா"** என்றான். அப்பொழுது நீதிபதி, **"சூரியனைத் தரித்திருக்கச் செய்து யுத்தம் பண்ணின யோசுவாவா நீ"** என்று கேட்டார். அந்தக் கைதி, **"இல்லை ஐயா, நான் சந்திரனை ஒளி வீசச் செய்த யோசுவா"** என்று பதில் உரைத்தான்.

இது மிகவும் எளிமையான ஒரு கதை. பெயரில் ஏதோ ஒரு முக்கியத்துவம் இருப்பதை இது காட்டுகிறது. நமது பேச்சிலும் செயலிலும் நாம் தேவனைப் பிரியப்படுத்தவே செய்ய வேண்டும். நமது பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பது முதல் நமது அன்றாட வாழ்க்கையில் அது எவ்வளவு முக்கியமானது என்பதை உணர வேண்டும். எந்த ஒரு தாயாகிலும் தன் மகளுக்கு யேசபேல் என்றோ தனது மகனுக்கு யூதாஸ் என்றோ பெயர் வைக்கக் கேள்விப்பட்டதுண்டா? அக்கிரமக்காரன் என்றும், கெட்டவன் என்றும் பெயரெடுத்த நபர்களின் பெயர்களை தனது பிள்ளைகளுக்குச் சூடி, வாழ்நாளெல்லாம் ஒரு பய உணர்வு அல்லது வெட்கப்படுதலை எந்தத் தாயும் தகப்பனும் விரும்ப மாட்டார்கள். பெயரில் ஏதோ முக்கியத்துவம் இருக்கிறது.

## தேவன் கொடுத்துள்ள பெயரை மட்டும் ஏன் பயன்படுத்தவேண்டும்?

நமது இரட்சிப்புக்குப் பாத்திரமான தேவன் இயேசு என்ற பெயரை முக்கியப்படுத்தினார். அவருடைய நாமத்திலே (பெயரிலே) மாத்திரமே மனிதன் இரட்சிப்படைய முடியும். (அப். 4;11,12). இந்த நாமத்திற்கு முன்பாக **"எல்லா நாமங்களும் முடங்க"** வேண்டும் (பிலிப். 2;9-11) மார்க்க ரீதியான காரியங்களுக்கு அப்பாற்பட்ட விஷயத்தில் வேண்டுமானால் ஒரு பெயரைப் போலவே மற்ற பெயரும் முக்கியத்துவம் வாய்ந்து காணப்படலாம். ஆனால் திருமறையைப் பொறுத்த காரியங்களில் கிறிஸ்துவின் நாமத்தைப் போலவே முக்கியத்துவம் வாய்ந்த நாமமில்லை (எபேசியர். 1;20,21). சபை கிறிஸ்துவின் மணவாட்டியாயிருக்கிறது. ஒரு மணவாட்டியானவள் தனது மணவாளனின் (கணவனின்) பெயரை தரித்துக் கொள்ள வேண்டும். (2. கொரி. 11;12). கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்தவர்களாகிய நாம், தேவனுடைய குடும்பதத்திற்குள்ளானவர்களாயிருக்கிறோம். ஃ குடும்பம் குடும்பத் தலைவரின் பெயரைத் தரித்துக் கொள்ளக் கூடாதா? (1. தீமோ. 3;15, எபே. 3;14,15). ஒரு பெயரானது எவ்வளவு முக்கியமானது என்பதை விளக்கப்படுத்தி, பிரசித்தி பெற்ற ஒரு கறுப்பர் இனத்தைச் சேர்ந்த சுவிசேஷ ஊழியர் மார்ஷெல் கீபில் என்பவர், பெயர் குறிப்பிடப்படாத காசோலை பிரயோஜனமற்றது என்று உதாரணப்படுத்துகிறார். ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் கூட்டம் நடத்திய பிரசங்கியார் கூறியதாவது : இந்த பிரசங்கியாரின் கூட்டத்தில் தினந்தோறும் கலந்து கொண்ட ஒரு பெண்மணி, பெயரில் ஒன்றுமில்லை என்று அந்தப் பிரசங்கியார் உறுதியாகச் சொல்லி வருவதைக் கேட்டாள். அவரவர் தன் இரட்சிப்பிற்காக பிரயாசப்பட வேண்டுமேயன்றி, பெயர் இந்த இரட்சிப்புக்கு எவ்வகையிலும் சம்பந்தப்படவில்லை என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி அந்தப் பிரசங்கியார் பேசுவதை அந்தப் பெண்மணிக் கேட்டாள். ஒரு நாள் இரவுக் கூட்டத்தில், அந்த ஊழியத்திற்கு தாம் ஏதாகிலும் காணிக்கை கொடுக்க விரும்புவதாக அந்தப் பெண்மணி கூறினார். மறுநாள் அந்தப் பெண்ணின் வீட்டிற்குச் சென்று அந்தக் காணிக்கையைப் பெற அந்த பிரசங்கியார் போனார். அந்தப் பெண் ஒரு காசோலையை அந்தப் பிரசங்கியாருக்கு கொடுக்க, அதை எடுத்துக் கொண்டு நேரடியாக அவர் வங்கிக்குச் சென்று பணமாக்க முயற்சித்தார். ஆனால் வங்கி காசாளரோ அந்தக் காசோலையை திருப்பி பிரசங்கியாரிடம் கொடுத்து அந்த செக்கில் (காசோலையில்) சம்பந்தப்பட்ட நபரின் பெயருடன் கூடிய கையெழுத்து

இல்லை என்பதைக் கூறினார். **"அந்தப் பெண் கையெழுத்திட மறந்திருப்பார்"** என்று கூறிய பிரசங்கியார், அந்தப் பெண்ணின் வீட்டிற்கு மீண்டும் சென்று கையெழுத்துப் போட்டுத் தரும்படி கேட்டார். அந்தப் பெண்மணி பிரசங்கியாரிடம் தான் கையெழுத்துப் போட மறந்துவிடவில்லை என்றும், அவர் பிரசங்கித்தப்படியே (பெயர் முக்கியமில்லை என்று) தான் அப்படிச் செய்ததாகக் கூறியது அவருக்கு வியப்பை அளித்தது. அது முதற் கொண்டு அப்படியொரு பிரசங்கத்தைச் செய்ய வேண்டாம் என்பதை அந்தப் பெண்மணி தனது செய்கையால் போதித்தார்.

## முடிவுரை

வசனங்களிலிருந்தும் அன்றாட நடைமுறை உதாரணங்களிலிருந்தும், சபை ஏன் திருமறையில் கூறப்பட்டுள்ளபடி பெயரை மாத்திரம் தரித்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் கண்ணுறக் கூடும். சில வேளைகளில் நமது உணர்வுகள் (நினைவுகள்) தேவனுடைய வசனத்துக்கு முரணாகச் சென்றுவிடக் கூடும். மார்க்க ரீதியிலான காரியங்களில் நமது நினைவுகளால் நாம் ஆளுகை செய்யப்படக் கூடாது. நாம் விசுவாசிக்கிற எதுவும் (திருமறை) உண்மைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். (ரோமர் 10;18). ஏதோ ஒரு வழி, ஏதோ ஒரு நாமம் (பெயர்) என்பதெல்லாம் தேவனுடைய வழியல்ல. (நீதி. 14;12). தேவனுடைய திட்டப்படியான காரியங்களையே செய்வோமாக. அவருடைய வசனத்தில் மட்டுமே நாம் சரியான பாதையை கண்டுபிடிக்க முடியும். (சங்கீதம். 119)

நம்முடைய கர்த்தருடைய சபை லுத்தரன், பேப்திஸ்து, மெதடிஸ்டு, மார்மன், கத்தோலிக்கம், யெகோவா சாட்சிகள், போன்ற பெயர்களைத் தரித்துக் கொள்ளக் கூடாது. அவரது புத்தகத்தில் கூறப்பட்டுள்ள பட்சத்தில் அந்தப் பெயர்களைத் தரித்துக் கொள்ளலாம். கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் நம்மிடம் விட்டுச் சென்ற காரியங்களையே நாம் கையாள வேண்டும். நாம் ஒன்றாக இருப்பதை கிறிஸ்து விரும்புகிறார். (யோவான். 17;20-23), ஆனால் தவறுகளை வைத்துக் கொண்டு நாம் ஒன்றாக இருக்க இயலாது. தமது சபையைக் கூட்டிச் சேர்க்க அவர் மறுபடியும் வரும்போது, நம்மையும் தம்மோடு அவர் சேர்க்க வேண்டும் என்று விரும்புவோமாகில், நாம் அவரையே பிரியப்படுத்த வேண்டும். (யோவான். 14;2,3).

தமிழில் : **ஆறுமுகம்**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி,

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண்-27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**